
உ

# மஹா கும்பாபிஷேக மலர்
# 1989



ம் - வண்ணார்பண்ணை வடகிழக்கு
ய வீரகத்தி விநாயகர்

University of Jaffna
235.4
SRI
249700(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்
# மஹா கும்பாபிஷேக மலர்



மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவின்

போது வெளியிடப்பட்டது.

University of Jaffna Library
ARCHIVES
235.4 NEB
249700
University of Jaffna
249700
Library
249700
25-7-1989
Donated by Mr. K. C. ...ULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1) ஆசியுரை

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் M. A; Ph. D. அவர்கள்

2) ஆசியுரை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

3) பாராட்டுரை

'சிவநெறிப் புரவலர்' திரு. க. கனகராசா J. P. அவர்கள்

4) வாழ்த்துரை

வைத்திய கலாநிதி வே. யோகநாதன் அவர்கள்

5) செய்திச் சுடர்

சிவஸ்ரீ. யோ. ஞானேஸ்வரக் குருக்கள் அவர்கள்

6) சிறப்புச் செய்தி

திரு. இராமநாதர் சம்பந்தநாதர் அவர்கள்

7) வாழ்த்துரை

திரு. த. சண்முகலிங்கம் J. P. அவர்கள்

8) பேழை வயிறன் பேரருளாளன் எமைப்பேணிக் காப்பாராக

திரு. எஸ். தியாகராஜா (எஸ். ரி. ஆர்.) அவர்கள்

9) வெளியீட்டுரை

திரு. வை. இரகுநாதமுதலியார் (நம்பிக்கைப் பொறுப் பாளர்) அவர்கள்

10) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

| | | |
|---|---|---|
| அ) | கடவுள் | 1 - 2 |
| ஆ) | ஆன்மா | 3 - 5 |
| இ) | கடவுள் வழிபாடு | 6 - 7 |
| ஈ) | கடவுள் உதவி | 8 - 9 |
| உ) | ஈசுரத் துரோகம் | 10 - 11 |
| ஊ) | யாக்கை நிலையாமை | 12 - 13 |
| எ) | பெரியோரை வழிபடல் | 14 - |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 11) கோயிலின் தன்மை<br>திரு. சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் | 15 - 17 |
| 12) திரு. அ. நாகலிங்கம் அவர்கள்<br>(முன்னுள் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) | |
| அ) நீராவி வீரகத்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை | 18 - 20 |
| ஆ) நான்மணி மாலை | 21 - 28 |
| இ) அட்டக மாலை | 29 - 31 |
| ஈ) திருப்பள்ளி எழுச்சி | 32 - 34 |
| உ) எச்சரிக்கை | 35 |
| ஊ) லாலி | 35 |
| எ) பராக்கு | 36 |
| ஏ) மங்களம் | 36 |
| 13) விநாயகர் விருத்தம்<br>திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் | 37 |
| 14) விபூதி உருத்திராஷம்<br>திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் | 30 - 40 |
| 15) புடபவிதி நூல்<br>இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்கள் | 41 - 44 |
| 16) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்<br>சைவ சமயிக்குரிய முக்கிய இலக்கணங்கள் | 45 |
| 17) சிவாலய தரிசனம்<br>திரு. சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் | 46 - 47 |
| 18) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்<br>திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள் | 48 - 49 |
| 19) நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வரலாறு | 50 - 64 |
| 20) நீராவிப் பிள்ளையார் பதிவேடு | 65 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழகம் இந்து நாகரீகத்துறை

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் M. A ; Ph. D,

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

இன்று இவ்வாலயத்தில் ஜீர்ணோர்த்தாரணமாகி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வைபவத்தை நேரே தரிசித்தவர்கள் கிடைத்தற்கரிய பேரரும் பேறு பெற்றவர்கள்.

நீராவியடியில் நெடுங்காலமாக எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் அருளாட்சி செய்து வருகிறார்.

இத் திருத்தலம் புனிதமானது. இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்தர் அரசாட்சி செய்த காலத்தில் திறைசேரித் தலைவராக இருந்தவர் பூலோக முதலியார் ஆவர். இப்பொழுது அறங்காவலராக இருப்பவரின் மூதாதையர் இவரே. முதன் முதல் ஸ்ரீ வீரகத்திப் பெருமானின் ஆலயத்தை நிறுவியவர் அவர் குல தெய்வம் வேதாரணிய வீரகத்தி விநாயகப் பெருமான். தாமும் தம் சந்ததியினரும் பரம்பரையாக வழிபட்டுய்ய வேண்டிய வேதாரணியத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து நிறுவி வழிபட்டார். அவ்வாறு தாபித்த தோடமையாது தானும் தன் சந்ததியினரும் ஆன்ம ஈடேற்றம் கருதி குரு மரபினர் வேதாரணியத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து வசிப்பதற்குரிய நீராவியடி குருக்கள் மடத்தையும் கோவிலுக்கு அருகாமையில் அமைத்தார்.

கச்சேரியிலுள்ள பதிவேட்டில் பத்தாவது பக்கத்தில் 34 வது இலக்கத்தில் நீராவியடியிலுள்ள பிள்ளையார் கோவில் பற்றிய விபரங்கள் பதிவு பெற்றுள்ளன.

இக்கோவிலில் மூன்று காலப் பூசைகள் மட்டுமின்றி நித்திய நைமித்தியங்களும் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றன. இரகுநாத முதலியார் கச்சேரியில் சிறுப்பராக கடமை புரிந்த காலத்திலே இக்கோவில் கட்டிடம் கற்றிருப்பணியாக பரிணமித்தது. இந்நூற்றுண்டின் முற்பகுதியில் இக்கோவிலில் இருந்து நல்லூர் தீர்த்தத் திருவிழாவிற்கு காவடி எடுத்துச் செல்வது வழக்கம். இருபாலை சேனாதிராசமுதலியார் நீராவியடிப் பிள்ளையார் மீது கலிவெண்பாக்கள் பாடியுள்ளார். வித்துவான் ந. சுப்பையா அவர்கள் இப்பாக்களுக்கு உரை வகுத்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் நிறுவிய இத்தர்மவான்களின் வழித்தோன்றலாக வந்தவர் இன்று அறங்காவலராக விளங்கும் வை. இரகுநாதமுதலியார் அவர்கள். இவரும் இவரது தர்மபத்தினியாரும் ஒருவரை ஒருவ விஞ்சும் வண்ணம் வீரகத்திப் பெருமானின் ஆலய ஜீர்ணோத்தாரண கைங்கரியத்தில் பெரிதும் ஈடுபட்டு வந்தனர். இதன் விளைவாக கற் திருப்பணியாக முன்னரே அமைக்கப்பட்ட கருவறையையும், அருத்த மண்டபத்தையும் அடுத்த மகாமண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம் முதலியனமுற்றிலும் புதிதாக திருப்பியமைக்கப்பட்டன. கோயிலின் இன்றியமையா உறுப்பான கோபுரமும் அழகுற எழுந்தது. இவற்றைத் தொடர்ந்து இன்று கும்பாபிஷேக வைபவமும் சிறப்புற நிறைவேறியுள்ளது.

தானம், பாலனம் இரண்டும் பெரும் புண்ணியங்கள். தானம் என்பது பொருளை கோவில் கட்டுவதற்காக கொடுப்பது. பாலனம் என்பது கட்டியகோவிலைப் பேணிக்காப்பது. தானம் பாலனம் இரண்டுக்கும் உரிய பலன்களை சாஸ்திரங்கள் மிக அழகாகக் கூறும். தானத்தின் பயன் ஸ்வர்கப்பேறு ஸ்வர்க இன்பங்களை அனுபவித்து வரும்பொழுது பயன்தேய்ந்து இறந்ததும் மறுபடியும் பூலோகத்திற்குப் புண்ணிய பயன் சேர்க்கத் திரும்பி வரவேண்டும். பாலனத்தின் பயன் உயர்ந்த அச்யுதமான, - திரும்பவும் கீழே (பூலோகத்திற்கு) வராத உன்னதமான மோஷக்ஷம் முக்தி எனப்படும் பதவி.

> "தானாத் ஸ்வர்கம் அவாப்நோதி
> பாலனாத் அச்யுதம் பதம்"

உயர்ந்த நிலையினரான அறங்காவலர்களுக்கு கிடைக்கும் இப்பதவி கிடைதற்கரிய உயர் பதவி.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நித்திய நைமித்தியகங்கள் குறைவற நிகழும் வண்ணம் சகல வளங்களையும் அறங்காவலருக்கும் பக்த ஜனங்களுக்கும் அநுக்ரஹிக்கும்படிகோயில் சூழல் வளம்பெற்று விளங்கவும், தரிப்போர்க்கு தனம், கல்வி, சாந்தி முதலியவற்றை வாரி வழங்குமாறும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டி அவர் திருவருளை முன்னிட்டு ஆசி கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குருமகா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

சிவசெம்மனச் செல்வர்களே!

நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ஜெயவீரசக்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நனிதே ஒரு குறையுமின்றி நிறைவெய்தி, இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறுவதையுமறிந்து பெருமகிழ்ச்சியும் அருள் வளமுமடைகிறோம். பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு நாம் எடுக்கும் விழாக்கள் கைங்கரியங்களின் மகிமை பெருமைகளைப் பேச்சால், எழுத்தால் விபரிக்க இயல்வதொன்றன்று. தும்பிக்கையான் திருவடிகளைத் தப்பாமல் பற்றிக் கொள்ள எல்லாச் சம்பத்துக்களும் கைகூடும். அருமொழிஅரசி ஒளவை அருளிப்போந்த அமுத வாக்குகள் தப்பாது, பொய்க்காது, பிழைக்காது எக்கருமத்துக்கும் சித்த சுத்தி, திட நம்பிக்கை, அயரா முயற்சி இவைகள் அவசியம். முக்கியம். இக் குடமுழுக்குப் பெருவிழா செவ்வனே நிறைவுறப் பல்வகையாலு பங்கு கொண்டு துணைநின்ற அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவநெறிப் புரவலர்' திரு. க. கனகராசா ஜே. பி.
அவர்கள்
(உரிமையாளர், மில்க் வைற் சோப் தொழிலகம்)
வழங்கிய

## பாராட்டுரை

### ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.

முற்காலத்தில் மூவேந்தர்கள்தான் தமிழையும் சைவத்தையும் வளர்த்ததுடன் மக்கள் பசிப்பிணி அகற்ற விவசாயம் ஓங்க குளங்களைக் கட்டி ஆவன செய்து வந்தார்கள். ஆனால் இன்றோ அப்படிப் பணமும் அதிகாரத் திறனுமுள்ள தனியார்கள் இல்லை. ஏதோ குருவிக்குத் தக்க இராகசுரம் என்பதுபோல் வீரகத்தி விநாயகர் ஆலயம் புனருத்தாரணம்செய்து கும்பாபிஷேகம் செய்யும் சிறந்த பணி மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும், பின்பற்றும் ஊக்கத்தையும் அளிக்கக்கூடியதாய் இருக்கின்றது.

தமிழுக்கும் சைவத்திற்கும் நாம் இன்றேரன்ன பணிகளுடன் அவற்றை விருத்திசெய்யவும் நம் பணிகளை விஸ்தரிக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகவுள்ள உணவுற்பத்தி விவசாயங்களிலும் மக்களை நாம் ஊக்குவிக்கும் பணிகளை மேற்கொண்டால் முன்னேற்றங்காணலாம். தமிழும் சைவமும் அருகிவிடாமல் தமிழர் கலை, பண்பு, கலாச்சாரங்கள் திரிபுருமல் காப்பது ஒவ்வொரு மனிதனினதும் தலையாய கடமையாகும். நாம் எல்லோரும் இது விடயத்தில் ஒற்றுமையுடன் ஆவன செய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வைத்திய கலாநிதி வே. யோகநாதன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

நான் என்னுடைய இளமைப் பருவத்தில் சாவகச்சேரி, கல்வயல் பெருங்குளம் அருள்மிகு அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் மகாகும்பாபிஷேகத்தில் தொண்டுகள் பல செய்து பங்கு பற்றும் பெரும் பேறு பெற்றேன். காலங்கள் சில செல்ல நான் எனது தொழில் நிமித்தம் ஆசார சீலராகிய சைவப் பெருங்குடி மக்கள் வாழும் என் மனைவியின் ஊரான வண்ணைபம்பதி நீராவியடியில் வாழும் பேறு கிடைத்தது. பெருங்குளம் வீரகத்தி விநாயகப் பெருமானையே குலதெய்வமாக வணங்கி வாழ்ந்து வந்த எனக்கு நீராவிப் பதிக்கு நான் முதன் முதலாக வந்த போதும் நான் வணங்கிய முதல் தெய்வமாக நீராவியடி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகரே அமைந்தார். அன்று தொடக்கம் என் குலதெய்வமாகிய அதே விநாயகப் பெருமானையே இங்கேயும் நீராவியடி வீரகத்தி விநாயகப் பெருமானின் உருவில் கண்டு அல்லும் பகலும் வணங்கி வந்தேன். அப்படி மெய்யன்போடு வணங்கி வந்த என்னை யாதொரு குறையுமின்றி தன் நிழலில் வைத்திருந்ததோடன்றி, தனக்கு இராஜகோபுரம் அமைக்கும் தொண்டில் பங்கு பெற ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் மூலம் சந்தர்ப்பம் கொடுத்து அருளினார். இன்று மகாகும்பாபிஷேகம் மகாசிறப்புடன் நிறைவெய்தி இராஜகோபுரம், கம்பீரமாக எழுந்து நின்று இவ் நீராவிப் பதிக்கே ஒரு புதிய சோபையைக் கொடுக்கின்றது.

விநாயகப் பெருமானுக்கு இராஜ கோபுரம் அமைக்கும் தொண்டில் பங்குபெற எனக்கு சந்தர்ப்பம் கொடுத்த ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு. இரகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத முதலியாருக்கும் அவர் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாந்தாதேவிக்கும் நான் என்னுடைய மனம் நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றேன். அத்துடன் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அவர்களுக்கு நீண்ட ஆயுளும் நல்ல சுகமும் அவர்கள் பிள்ளைகளுக்கு பெருவாழ்வும் மற்றும் சகல பாக்கியங்களையும் அருளி இந்த விநாயகர் ஆலயம் மேலும் சிறப்புடன் நித்திய, நைமித்திய பூசைகள் குறைவற நடைபெற ஆவன வேண்டி விநாயகப் பெருமானின் அருளைப் பணிவுடன் இறைஞ்சுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவஸ்தானகுரு

## சிவஸ்ரீ யோ. ஞானேஸ்வரக் குருக்கள் வழங்கிய

# செய்திச் சுடர்

கஜானனம் சந்த்ர ஸமான வர்ணம்
ஸ்வதந்த பாசாங் குஷலட்டு காணி
ஹஸ்ஸ்தர் ததானம் கமலாஸனஸ்த்தம்
விக்னேஸ் வரம் நௌமி ஸதாப்ரஸன்னம்
“குருப்பிரம்மா குருர் விஸ்னு குருதேவோ மகேஸ்வரா
குருசாட்சாத் பரம் பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமகா”

விநாயகப் பெருமான் அடியார்களே:-

ஆன்மா விடுதலைக்கு அவசியமான கிரியைகளைப் பற்றியும் அவை நடத்துவதற்குரிய இடம் ஆலயம். அத்தகைய ஆலயமொன்றில் திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மஹாகும்பாபிஷேகம் பெரும் சாந்தி விழா ஆகும். பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப்படியாக செய்முறைகளினால் தோற்றுவித்து கையிலே பெறுவது போல் பிரபஞ்ச மூலங்களான பஞ்ச பூதங்களின் மார்க்கமாகப் படிப்படியாக பரம்பொருளை அன்மி வரச் செய்பவை கும்பாபிஷேகம் கிரியைகளில் ஒன்றாகும்.

மஹா கும்பாபிஷேகமானது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்வதால் இதனை தரிசித்தல் பெரும் பேறாகும். “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்பதற்கு அமைய வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அழகு வர்ண வேலைகளும் கூடிய பஞ்ச தள இராஜ கோபுரம் அமையப் பெற்று அதற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இடர் களைந்து இன்னல் தீர்த்து அருள் புரியும் விநாயகப் பெருமானுக்கு நிகழும் சுக்கில வருஷம் உத்தராயணம் வைகாசி மாதம் 26-ம் திகதி (8 - 6 - 89) ல் குருவாரமும் பூச நட்சத்திரமும் கூடிய நன்நாளில் மிதுன லக்ன குரு ஹோரையில் மஹா கும்பாபிஷேகம் நிகழப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களும் ஏனைய குருமார்களும் சிறப்பாக நடாத்தினார்கள்.

சிவ புண்ணியங்களை மதித்துப், பெரும் பணியாற்றி முயற்சி திருவினையாக்கும் எனும் குறிக்கோளுக்கிணங்க அரன் நாமமே சூழ்ந்து வையகமும் துயர் தீரவும் எண்ணியே இவ் ஆலயத்தை மிகவும் சிறந்த முறையில் அமைத்த ஆலய தர்மகர்த்தாவாகிய திருவாளர் வை. இரகுநாதமுதலியாரும் அவருடைய குடும்பத்தினரும் பெரும் முயற்சி மேன் மேலும் வளர எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் உடைய புண்ணிய கைங்கரியங்களில் ஈடுபட்டுழைக்கும் வல்லமையும் தீர்க்காயுளையும் வழங்க வேண்டுமென பிரார்த்தித்து என் மனப்பூர்வமான ஆசியை கூறுகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய
முன்னாள் பரம்பரை தர்மகர்த்தா
**திரு. இராமநாதர் சம்பந்தநாதர் அவர்கள்**
வழங்கிய

# சிறப்புச் செய்தி

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தனிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து".

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம் புராதனமானது. எமது குல முன்னோர் இப்பதியில் வந்து குடியேறியபொழுது தங்கள் குலதெய்வமான வேதாரணியம் வீரகத்தி விநாயகரையும் இங்கு கொண்டுவந்து ஸ்தாபித்தார்கள். இவ் ஆலயம் பரம்பரை பரம்பரையாக எங்கள் குலத்தோரால் நல்ல முறையில் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

ஆரம்பத்தில் கிடுகுக் கொட்டிலில் வீற்றிருந்த விநாயகப் பெருமான் சந்ததியினரால் படிப்படியாக ஆலயம் பிற்சந்ததியினரால் பெரிதாக்கப்பட்டது. இன்று சிறப்பான கர்ப்பக் கிரகம் மற்றும் அழகிய மண்டபங்களை உடைய ஆலயத்தில் உறைந்து விநாயகப் பெருமான் அருள்பாலித்து வருகின்றார்கள்.

நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகள் நைமித்திய பூசைகள் மகோற்சவங்களால் நீங்கும். ஆலயத்தில் பழுதுகள் பார்த்து திருத்தப்படும்போது மகா கும்பாபிஷேகம் அவசியமாகின்றது. இது பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறுவது வழக்கம். மகா கும்பாபிஷேகத்தால் ஆலயம் புனிதம் அடைகின்றது. ஆலயம் அமைந்துள்ள பூமி புண்ணியபூமி ஆகின்றது. ஆதலால் பக்தர்கள் ஆலய சுற்றாடலை அசுத்தப்படவொண்ணாது மகாகும்பாபிஷேகத்தைக் கண்டு களித்தவர்கள் தெய்வாம்சம் பெறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் வேத சிவாகமங்களில் சொல்லப்பட்ட விதிமுறைகளுக்கமைய நடைபெறவேண்டும்.

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னருணந்தி யெடுத்துரைத்தானே"

என்பது திருமூலர் திருவாக்கு. ஆலயங்கட்கு ஆசாரம் இன்றியமையாதது. ஆசாரம் பேணப்பட்டு விதிமுறைகளுக்கமைய நித்திய நைமித்திய பூசைகள் இடம்பெற்றால் மூர்த்தியின் திருவருள் எங்கும் பொங்கும்.

கோ இறைவன் - (கடவுள்) ஆ (பசு - ஆன்மா) கோயில் ஆ, வாகிய நாம் கடவுளை உருவகப்படுத்தி வைத்து வழிபடுவதற்கு அமைத்துக்கொள்ளும் இடம் ஆலயம் - ஆவாகிய ஆன்மாக்கள் கோ, வுடன் லயப்படுவதற்கு – ஒன்றுபடுவதற்கு – உரிய இடம்.

அகமும் புறமும் சுத்தமாகிய அமைதியான நிலையிலேயே மன ஒடுக்கம் ஏற்பட இடமுண்டு. ஆனமையால் கோயிலில் பக்தி மார்க்கத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையிலே கருமங்களைச் செய்வதற்கு முயலவேண்டும். வீண் ஆடம்பரங்களும் புலன் ஒடுக்கத்தைப் பாதிப்பதற்குரிய செயல்களும் நிகழ்ந்தால், நாம் அங்கு செல்வது அவமே.

எல்லா ஆன்மாக்களும் அநாதியே மலசம்பந்தப்பட்டுள்ளன. மனிதப்பிறவி கிட்டிய பலன் போகம் அனுபவிப்பதற்கு மட்டுமல்ல. இறைவனை வழிபட்டு மலநோய்களின் நீங்கி பிறவிப்பிணியை நீக்கிக் கொள்வதற்கேயாம். இறைவனாகிய வைத்தியநாதனால் அல்லாது எமது வினைகள் நீங்குவதற்கில்லை. ஆன்மாக்களாகிய எமது உடம்பிற்கு ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்கு நாம் பரிகாரிமார் சொற்படி முறையாக மருந்துகளை உட்கொண்டால்தான் நோய் குணமாகும். அவ்வாறு செய்யாவிடின் நோய் மிகுந்து வேதனையைத்தான் கொடுக்கும், இதுபோலவே எமது மல நோய்களைத் தீர்ப்பதற்கும் கடவுள் அருளிச்செய்துள்ள வேத ஆகம வழிப்படி வழிபாடு செய்தால்தான் தீரும். அல்லது செய்யின் மேன்மேலும் தீவினைகளையே அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது சமூகம் அனுபவிக்கும் துன்பங்கள் தீருவதற் கென்று கோயில்களிலும் மற்றும் சமயசார்பான இடங்களிலும் எத்தனை பிரார்த்தனை வழிபாடுகள் நாள்தோறும் எங்கெங்கெல் லாமோ நடைபெறுகின்றன- ஆனால் இடர்கள்தான் மிகுகின்றன.

இறைவன் 'மெய்நின்றவர்கட்கு என்றும் மெய்யன்; அல்லா தவர்கட்கு பொய்யன்' என்ற திருவாக்கை உணர்ந்து நாம் எமது இறைவழிபாட்டைப் பிழைவிடாது விதிப்படி செய்தால் நமது சமூகம் உய்வதற்கு வழி உண்டு.

நாமெல்லாம் அகச்சுத்தி குறைவானவர்கள். ஆதலால், ஆல யத்திற்குப் புறச்சுத்தியோடு போதல்வேண்டும். ஆலயத்திற்குள் அசுத்தி செய்யாமல் வழிபட்டு நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்கின்ற அபசாரங்களைப் பொறுத்துக்கொள்ளுமாறு இறைவனை வேண்டிக்கொள்ளுவோமாக.

1974 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் இப் பொழுது ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, இராஜகோபு ரமும் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது. ஆயி ரக்கணக்கான மக்கள் கும்பாபிஷேக தரிசனம் கண்டு மகிழ்ந்தனர்.

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலா பிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மகா கும்பாபிஷேக சிறப்புமலர், மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவின்போது வெளியிடவிருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின் றேன். மகா கும்பாபிஷேக மலர் நீராவி வீரகத்தி விநாயகர் திருவருளை வெளிப்படுத்தி, சைவமக்களை நன்னெறிப்படுத்தும் சாத னமாக அமைதல் சாலப் பொருத்தமாகும், வேதநெறி தழைத் தோங்கவேண்டும். இதுவே எம் முன்னோர் குறிக்கோள்.

மகா கும்பாபிஷேகம் கண்ட நீராவி வீரகத்தி விநாயகப்பெரு மான் திருவடிகளை வணங்கி, அவர் அருளால் கும்பாபிஷேக மலர் சிறப்பாக அமைய எனது பிரார்த்தனையைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைச் செயலாளர்
திரு. த. சண்முகலிங்கம் J. P. அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துரை

யாழ்ப்பாணம் நீராவியடிப் பதிக்கு அழகும் அருளும் கொடுப்பது "நீராவிப் பிள்ளையார் கோவில்" என அழைக்கப்பெறும் வீரகத்தி விநாயகர் ஆலயம்.

அடியார்களின் இடர்களைந்து, இன்னல் தீர்த்து அருளாட்சி புரியும் ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் நிறைவாகிச் சிறப்பாக ஐந்து நிலை இராஜ கோபுரமும் அழகுற அமைத்து சிறந்த சிவாச்சாரியர்களால் ஆகமவிதிப்படி மகாகும்பாபிஷேகம் 08 06 - 1989 அன்று பக்திபூர்வமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகக் கிரியைகள் நடைபெற்று 25 - 07 - 1989 அன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா சிறப்புற நடைபெற உள்ளது. இப் பூர்த்திவிழா அன்று "கும்பாபிஷேக மலர்" ஒன்றும் வெளியீடு செய்யப்பட உள்ளது.

நிரம்பிய சமய அறிவும், சமய பக்தியும், தரும சிந்தையும், ஆசாரமும் உடைய மேற்படி ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு. வை. இரகுநாத முதலியாரினதும் அவர்தம் பாரியாரினதும் அயராத உழைப்பினாலும், வீரகத்தி விநாயகருடைய திருவருளினாலும் மேற் குறிப்பிட்ட திருப்பணிகள், கும்பாபிஷேக, மண்டலாபிஷேகக் கிரியைகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன.

இவற்றிற்கெல்லாம் தோன்றாத் துணையாக நின்று உதவிய வீரகத்தி விநாயகருடைய திருவருளினைச் சிந்தித்து வணங்கிப் போற்றுவதுடன் அறப்பணிகளைச் சிறப்புறச் செய்வித்த அறங்காவலர் அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேழை வயிறன் பேரருளாளன் எமைப் பேணிக் காப்பாராக

எஸ். தியாகராஜா (எஸ். ரி. ஆர்)
(வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி
திருக்கோயில் பொருளாளர்)

இந்து சமயத்தவர் எக்காரியத்தை எடுத்தாலும் பிள்ளையார் சுழியிட்டு, விநாயக வணக்கஞ் செய்து தங்கருமம் செய்வர். சிவ மயமாய உலகிலே சிவமயமான ஒரு ஒலியுண்டு. ஓசை ஒலியெலா மாய நிலையில் ஒலிக்கு ஓர் உருவம் அமைந்தாற்போலுள்ளது பிள்ளையார் வடிவம் சிவ தத்துவத்திலிருந்து முதலில் எழுந்த ஒலிக்கு விநாயகர் திருவுருவமானமையில் அவரைச் சிவனின் பிள்ளையெனக் கருதி பிள்ளையார் எனச்சிறப்பித்தனர். முதலில் வந்த திருவடிவமாகவே மூத்த பிள்ளையார் என்றனர்.

தமிழ் நாட்டிலாயினும் ஈழத் திருநாட்டிலாயினும் முதலில் எழுந்தவை வாய்மொழி இலக்கியம், நாட்டார் பாடல்கள் என்று இன்று வழங்குவனயாவும் எழுத்தளவில் இலக்கியம் தோன்று முன்பே வாய்மொழியாகச் செவிவழியேறிச் சிந்தையை நிரப்பிய இலக்கியங்களாகும். இத்தகைய வாய்மொழி இலக்கி யங்களில் அதிக இடம் பெற்றுள்ளவை விநாயக வணக்கப் பாடல் கள். "ஏடறியேன், எழுத்தறியேன்" என்று பாடிய பாவலர்கள், "மூத்த கணபதிக்குத் தோத்திரம் சொல்லி", முடியோடு தேங்கா யைப் படியில் உடைத்து" என்றெல்லாம் பாடியுள்ளார்கள்.

பிள்ளையாருக்குத் தனிக்கோயில் அமையாமல் அவர் பரிவார தெய்வமாய் எழுந்தருளியுள்ள இடங்களிலும் அவருக்கு முதற் பூசை நடைபெறுகின்றது. அன்றி ஊரெங்கும் குளக்கரைகளிலும் மர நிழல்களிலும், நெடுஞ்சாலைகளின் சந்திகளிலும் பிள்ளையாருக் குக் கோயில்கள் உண்டு; எங்கே அரசமரம் செழிப்பாய் நிற்கிறதோ அங்கே பிள்ளையார் எழுந்தருளுவதற்குத் தாமதிப்பது இல்லை.

பிள்ளையார் பிரணவ சொரூபி, பிரணவப் பொருள். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்பது அவர் புகழ் பாடும் பாடல். பிள்ளையாரை வழிபடுதலும் மிகச்சுலபமான செயல்; ஆற்று மண், புற்றுமண், பசுச்சாணி, வெல்லம், மஞ்சள்மா, வெண்ணெய், அரிசிமா ஏதாவது ஒரு கைப்பிடி எடுத்து உருட்டி வைத்து அதன் மேல் ஒரு பூவையோ அறுகம்புல் நெட்டையோ சாத்திவிட்டால் பிள்ளையார் ஓடோடி வந்து அதிலே ஆவாகனமாகி எழுந்தருளி இருந்து அருள் சுரப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறுயின் ஆகம விதிக்கமைய ஆலயம் அமைத்து அவருக்குரிய திருவுருவத்தை வடித்து பிரதிட்டை செய்து பூசைகள் விழாக்கள் செய்தால் அவர் பேரருள் பெரு வெள்ளம்போலப் பெருகி நாட்டை நனைத்து நல்வாழ்வைத் தரும் என்பது நூல் அறிந்த நுண் அறிவாளர் கண்ட உண்மை. பிள்ளையாரை வழிபடுதலோடு உபாசனுமூர்த்தியாகக் கொண்ட நம்பியாண்டார் நம்பி, அதிராவடிகள், பட்டினத்தடிகள், ஔவையார் முதலானோர் பெற்ற பேரருள் பெருவெள்ளம் போன்றதாகும்.

பிள்ளையார் தேவர்க்கும், மனிதர்க்கும், அசுரர்க்கும், மிலேச்சர்க்கும் பிற மதத்தவர்களுக்கும் பேரருள் சுரந்தவர். அவர் எந் நாட்டவர்க்கும் இறைவன் என்பது தூரகிழக்கு நாடுகளிலும், சீன முதலான தூரகிழக்கு நாடுகளிலும் அவர் திருவுருவம் காணப்பெறுதலால் அறியக் கிடக்கிறது.

பிள்ளையார் வடபாரதத்தையும், தென்பாரதத்தையும் நெருக்கமாக கலாசார அமைப்பில் இணைத்தவர். அவருக்கு பௌத்தர், சமணர் ஆகிய பிற மதத்தவர்களும் முதலிடம் கொடுத்து வழிபட்டு வந்தவர்கள். அவர் கணங்கள் எல்லோருக்கும் தலைவராய கணபதி. விக்கினங்களைப் போக்கும் விக்கினேஸ்வரர். தமக்கு நாயகரோ தலைவரோ இல்லாமல் தாமே பெரும் தலைவராயுள்ள விநாயகர், அவரை வழிபடும் அடியவர் வீட்டில் இலட்சுமி தானுகவே வந்து சுபீட்சம் கொழிக்கச் செய்பவள் என்பதும் உண்மை.

எல்லோரும் வாழ அருள் புரியும் எங்கள் விநாயகப் பெருமான் நீராவியடியில் எழுந்தருளியுள்ளார். வண்ணைச் சிவாலயம், பெருமாள் கோவில், கலட்டி அம்மன் ஆலயம், வீரமாகாளி அம்மன் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில் முதலாய திருவீற்றிருந்தருளும் ஆலயங்களின் நடுவில் தொப்பையப்பன் பேரருள் சுரக்கிறுன்.

இன்று புனரமைக்கப்பட்ட திருக்கோயில் அழகான ராஜகோபுரம், பிரகாரம், அர்த்த மண்டபம், பெருமண்டபம், மணிக்கோபுரம் முதலிய நன்கமைய பெருந்சாந்நித்தியம் பெற்று அடியார்களை அஞ்சாதீர்கள், இங்கேவாருங்கள் என்றழைத்து அருள் பாலிக்கிறது ஆகம முறைகளுக்கமைய அருமையாக புனருத்தாரணஞ் செய்தவர்கள், நல்ல முறையில் கும்பாபிஷேகமும் செய்து மண்டலாபிஷேகமும் செய்கிறுர்கள். எம்பெருமான் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறுர். பேரருள் பெறுவதற்கு அடியார்கள் வாருங்கள். "விநாயகப்பெருமான் ஞானமதம் எல்லோரையும் வாழ்விப்பதாக."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வெளியீட்டுரை

நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம் மிக்க பழமை வாய்ந்தது. அற்புத சக்தி வாய்ந்தது. புலவர் பெருமக்களால் பாடிப் பரவப் பெற்றது.

1979ம் ஆண்டில், "நீராவிப் பிள்ளையார் கலி வெண்பா" நூல் உரையுடன் வெளியிடப்பெற்றது. சென்ற நூற்றாண்டிற் புகழ் பெற்று விளங்கிய இருபாலைச் சேனாதிராய முதலியார் நீராவிப் பிள்ளையார்மீது 'கலிவெண்பா' பாடினார். இக் கலிவெண்பாவிற் குப் பதச்சேதம் செய்து பொருள் காண்டலும் பொருள் உரைத் தலும் எல்லார்க்கும் சுலபமானது அன்று. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த இயற்றமிழ் ஆசிரியரான வித்துவான் நா. சுப்பையா பிள்ளை அவர்கள் இக்கலி வெண்பாவுக்கு உரை எழுதி உதவினார். இதை அப்போதைய ஆலய தருமபரிபாலகர் திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அச்சிட்டு வெளியீட்டு விழா நடத்தி விநாயக அன் பர்கட்கு வழங்கினார்கள்.

இப்பொழுது மகாகும்பாபிஷேக வைபவத்தைச் சிறப்பிக்கும் வகையில் மகா கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுகின்றது. இம் மலரில் சிறப்பாக இடம்பெறுவது ஆலய உரிமையாளர்களில் ஒரு வரான திரு. அ. நாகலிங்கம் அவர்கள் நீராவி வீரகத்தி விநாயகர் மீது பாடிய திருப்பதிகங்களாகும். தனது உடல் தளர்ந்த நிலை யிலும் உள்ளம் தளராது தனது குலதெய்வத்திற்கும் பாமாலைசூடி அர்ச்சித்திருக்கின்றார். விநாயக அடியார்கள், இப்பதிகங்களைப் பாடி வீரகத்தி விநாயகரை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.

கலியுகத்தில் அடிதலை தடுமாறும்போது, சைவசமயக் கோட் பாடுகளையும், ஆலய வழிபாட்டு முறைகளையும், சைவமக்கள் மத்தியில் தெரிய வைப்பது மிகப் பெரிய சிவத்தொண்டு ஆகும் என்றார் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்கள். அந் நோக்கம் நிறைவேற சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பல சைவப் பெரியார்கள் எழுதிவைத்த பொக்கிஷங்களில் சிலவற்றை இக் கும்பாபிஷேக மலரில் இடம்பெறச் செய்துள்ளேன். சைவப் பெருமக்கள் படித்துப் பயனடைவார்கள் என்பது எண்ணம்.

நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகருக்கு இதுவரை முறை யான 'ஆலய வரலாறு' எதுவும் எழுதப்படவில்லை. எனது முன் னோர் இவ்வாலயத்தை ஸ்தாபித்ததுமுதல் மகா கும்பாபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையான விபரங்கள் பலரிடம் இருந்து சேகரிக்கப்பெற்று இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஆலய வரலாறு அறிய முற்படு வோருக்கு இது மிக்க உதவியாக இருக்கும்.

"தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள தலங்களைப் பற்றியும், அவற்றின் பாரம்பரியம், மரபு வழிபடப்படும் தெய்வம் பற்றியும், வழிபடுவோர் அறிய முற்படுவது மிகவும் இன்றியமையாதது. சிறப் பாக சமயம், பண்பாடு பற்றியும் பயிலும் இளம் தலைமுறையின ருக்கு இத்தகைய நூல்கள் சிறந்த வரப்பிரசாதமாகும். எர்முன் னோரின் சமயத் தொண்டுகளையும் பணிகளையும் அறியப் பெரிதும் உதவுவன."

இந்நூலுக்குரிய ஆசியுரை, வாழ்த்துரை வழங்கி இந்நூலைச் சிறப்படையச் செய்த பெரியார்கட்கும் எனது பணிவான நன்றி உரித்தாகுக.

நீராவி விநாயகப் பெருமானுடைய மகா கும்பாபிஷேகத்தை முறையாகவும் சிறப்பாகவும் நடாத்திக் கொடுத்த பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்கட்கும். ஏனைய குருக்கள்மார் அனைவருக்கும், ஆலயகுரு யோ. ஞானேஸ்வரக் குருக்கள் அவருக்கும் எனது பணிவான நன்றி உரித்தாகுக.

மகா கும்பாபிஷேக வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக நிகழ்ச்சிகளின்போது மாலைநேரங்களில் கதாப் பிரசங்கம், இன்னிசை நிகழ்ச்சிகள், பக்திப் பாடல்கள், சொற் பொழிவுகள் நிகழ்த்தி மக்கள் மனதுக்கு நிம்மதியும், ஆறுதலும் அளித்து அறிவுச்சுடர் ஏற்றிய பெருமக்கள் அனைவருக்கும் நான் மிக்க நன்றியுடையேன்.

புராணபடனம் சைவ கலாசாரத்தின் ஓர் அங்கம். திருத் தொண்டர் புராணம் என வழங்கப்படும் பெரியபுராணம். புராண படனம் செய்த வைத்திய கலாநிதி நா. கனகரத்தினம் அவர்கட் கும், மற்றவர்கட்கும் எனது பணிவான நன்றி.

ஆலய புனருத்தாரண, இராஜகோபுர நிர்மாணம், மகாகும் பாபிஷேகம், மண்டலாபிஷேகம் போன்றவற்றில் எனக்கு உறு துணையாக நின்று ஏனைய ஆலய உரிமையாளர்கள் திருமதி. சாந்தா தேவி, இரகுநாத முதலியார், இ. சப்பந்தநாதர் வைத்தியகலாநிதி யோகநாதன், அ. சேனாதிராசா சே. செல்வராசா, ஆகியோருக்கும். மற்றும் பலவழிகளில் பணிபுரிந்து உதவிய சைவப் பெருமக்களுக் கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை மிகவும் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையினருக்கும் எனது நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மூலமூர்த்தி



ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அலங்காரத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயில் மகா கும்பாபிஷேக மலர்

## கடவுள்

உலகமானது சித்தும் அசித்துமென இருவகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங் காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையுஞ் செய்தற்கு ஒரு கடவுள் இருக்கின்றார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர், அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர், அவர் அறியாதது ஒன்றும் இல்லை. அவருடைய அறிவு இயற்கை அறிவு. ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர், தம் முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர். அவர் தம் வயமுடையவர், பிறர் வயமுடையவரல்லர், அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர்; அவரின் மேலானவரும் இல்லை; அவருக்குச் சமமானவரும் இல்லை. அவர் சகலலோகத்துக்கும் ஒரே நாயகர். அவர் செய்யுந் தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன்மாக்களிடத்திலுள்ள கைமாறில்லாத அளவு கடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு வேதம். ஆகமம் என்னும் முதனூல்களை அருளிச் செய்தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள் விலக்கப்பட்டவைகளெல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளைப் பிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இரும்புக்கோல் காச்சிச் சுடுதலும், கண்ணிற் படலத்தை உரித்தலும் அவர்களிடத்திலுள்ள இரக்கத்தினலன்றி வன்கண்மையினலல்லவே. அது போலக் கடவுள் பாவஞ் செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ் செய்யா வண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினல், அதுவும் கருணையேயாம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
நான்காம் பாலபாடம்

---

கடவுள் ஒருவர் இருக்கிருர்.
கடவுள் எங்கும் இருக்கிருர்.
கடவுள் எல்லாம் அறிவார்.
கடவுள் எல்லாம் வல்லவர்.
கடவுள் இரக்கம் உடையவர்.
கடவுள் நம்மைக் காக்கிருர்.
கடவுளை ஒருகாலமும் மறவாதே.
கடவுளை எந்நாளும் வணங்கு.

★ ★

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய்; பாசத்தை யுடையவர்களாய், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினை யென்னும் இருவினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூருயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன; அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள் அண்டசம் முட்டையிற் ருேன்றுவன. சுவேதசம் வேர்வையிற் ருேன்றுவன; உற்பீச்சம், வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் ருேன்றுவன. எழுவகைப் பிறப்புக்களாவன; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்பது மரம், செடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும் நான்குகால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்வனவும் நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி, சீட்டும், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும், வித்திலும் வேர், கொம்பு, கொடி, கிழங்குகளிலும் தாவரங்கள் பிறக்கும். தாவரமென்ருலும், நிலையியற் பொருளென்ருலும், அசர மென்ருலும் பொருந்தும். தாவரமல்லாத மற்ற ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கம மென்ருலும், இயங்கியற் பொருளென்ருலும், சரமென்ருலும் பொருந்தும்.

தேவர்கள் பதினெரு நூருயிர யோனி பேதம். மனிதர்கள் ஒன்பது நூருயிர யோனி பேதம், நாற்கால் விலங்கு பத்து நூருயிர யோனி பேதம், பறவை பத்து நூருயிர யோனி பேதம், நீர் வாழ்வன பத்து நூருயிர யோனி பேதம், ஊர்வன பதினைந்து நூருயிர யோனி பேதம், தாவரம் பத்தொன்பது நூருயிர யோனி பேதம் ஆகத் தொகை எண்பத்து நான்கு நூருயிர யோனி பேதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் தாம் எடுத்த சரீரத்துக்கு ஏற்ப மெய், நாக்கு மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளினாலும், சித்தத்தினாலும், அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும் மரமும் முதலியவை பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். இப்பியும் சங்கும் முதலியவை அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள். தும்பியும், வண்டும் முதலியவை அம் மூன்றினோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும், பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும், மனிதர்களும் அவ்வைந்தனோடு சித்தத்தாலறியும் அறிவு முடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள்; தாம் பூமியிலே செய்த நல்வினை தீவினையென்னும் இருவகை வினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும் அநுபவிக்கும். அப்படி அநுபவித்துத் தொலைத்துத் தொலையாமல் எஞ்சி நின்ற இருவினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து, அவைகளின் பயன்களாகிய இன்ப துன்பமிரண்டையும் அநுபவிக்கும். இப்படியே நமக்கு ஒரு நிலைமையில்லாத கொள்ளிவிட்டமும் காற்றாடியும் போல, கடவுளுடைய ஆஞ்ஞையினாலே கருமத்துக்கு ஈடாக, மேலேயுள்ள சுவர்க்கத்திலும், கீழேயுள்ள நரகத்திலும், நடுவேயுள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் தாவரயோனி முதலிய கீழுள்ள யோனிகளெல்லாவற்றினும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணிய மேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம். இவ்வருமை ஆராயுங்காலத்து கடலைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலும். இத்தன்மையையுடைய மனிதப் பிறப்பை எடுப்பினும், வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தைவிட்டு அவை வழங்கும் புண்ணியதேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையாகிய மனிதப் பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்கு காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும், பத்து மாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும், பிறந்த பின் சில காலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசுக்கு மேல் பதினாறு வயசு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலுள்ள பாலா வத்தையின் அழியினும் அழியும் அதற்கு மேல் நாற்பது வயசு வரையிலுள்ள தருணவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச் சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாமே. அழியுங் காலமோ தெரியாதே, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாதே. ஆதலால் இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங் கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
நாலாம் பாலபாடம்

குரு வாக்கைத் தட்டாதே.
பிதா மாதாவை வழிபடு.
உபாத்தியாயருக்கு அமைந்து நட.
கல்வியே அழியாத செல்வம்.
வீண் நேரம் போக்காதே.
புத்தகத்தைக் கிழித்துப் போடாதே.
கற்பலகையை உடைத்துப் போடதே.
தினம்தோறும் பள்ளிக்கூடத்துக்கு வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வழிபாடு

கடவுள், புறத்திலே திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம் முதலிய திருமேனியும், தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்திலே உயிர் இடமாகக் கொண்டு நின்றும் இங்குள்ளவர் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

கடவுள் அங்கிங்கெனுதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும் இவ்விடங்களின் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களெல்லாவற்றினும் பாலில் நெய்போல விளங்காது நிற்பர்.

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினுலே தியானித்தலும், வாக்கினுலே துதித்தலும், கைகளினுலே பூசித்தலும், கால்களினுலே வலம் வருதலும், தலையினுலே வணங்குதலும், செவிகளினுலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினுலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்.

அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்பு போலும். அன்பாவது தன்னுல் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்சி. கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன, அவருடைய உண்மையை நினைக்குந் தோறும், கேட்குந் தோறும், காணுந் தோறும் தன்வசமழிதலும், மயிர்கால் தோறுந் திவலை உண்டாகப் புளகங் கொள்ளலும், ஆனந்தவருவி பொழிதலும், விம்மலும், நாத் தழுதழுத்தலும், உரை தடுமாறலும், அவரால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவைகளைச் செய்யா தொழிதலும், அவருடைய மெய்யடியார்களைக் காணும் பொழுது கூசாது வணங்குதலும், பிறவுமாம்.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலாலுணல், களவு, கள்ளுணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களாகிய நாம் பிறர்வயமுடையவர்களும், சிற்றறிவு சிறுதொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே, நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மைகளையே செய்யவும் வல்லேம் அல்லேம். ஆதலால், தம்வயமுடையவரும் முற்றறிவு முற்றுத் தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவோமாகில், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள் செய்வார்.

—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
நான்காம் பாலபாடம்

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும்; அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசிரியர் ஒருவரே உயிர்த்துணை: ஆதலால் அவரை ஒரு காலமும் மறவாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுதவி

கடவுளுதவியாவது, கடவுளால் ஆன்மாக்களாகிய எங்களுக்குச் செய்யப்படும் உதவி. கடவுள் தம்முடைய அனுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவர் அல்லர். ஆதலால்: அவருக்கு நாம் செய்யும் உதவி ஒன்றுமில்லை. ஒருவர் ஒருவருக்கு ஓர் உதவியைச் செய்வது, அதனைப் பெற்றுக்கொண்டவர் அதனுற் சுகம் உறுதற்கே. துக்க நீக்கத்தின் பொருட்டுச் செய்யும் உதவியும் சுகத்தின் பாற்படும். அச்சுகம் சரீரசுகம், ஆன்ம சுகம் என இரு வகைப்படும். இவ் விரண்டனுள், நிலையில்லாத சரீர சுகத்தின் பொருட்டுச் செய்யும் உதவியினும், நிலையுள்ள ஆன்ம சுகத்தின்பொருட்டுச் செய்யும் உதவியே சிறந்தது. அதினும் சரீர சுகம் ஆன்ம சுகம் என்னும் இரண்டன் பொருட்டுச் செய்யும் உதவி மிகச் சிறந்தது. இந்த இரண்டு சுகங்களையும் நமக்குத் தந்தருளுபவர் கடவுளே.

கடவுள் நம்மேற் கொண்ட இரக்கத்தினுல் நாம் இருத்தற்குப் பூமியையும், உலாவுதற்கு ஆகாயத்தையும், உண்ணுதற்குச் சல முதலியவற்றையும், உணவுகளைப் பாகம் பண்ணுதற்கு அக்கினியையும், சுவாசித்தற்கு வாயுவையும் உதவினுர். இன்னும் வேலை செய்யுங் காலமாகிய பகற் காலத்தில் ஒளியைக் கொடுத்தற் பொருட்டுப் பேரொளியாகிய சூரியனையும், இளைப்பாறுங் காலமாகிய இரவில் ஒளியைக் கொடுத்தற் பொருட்டுச் சந்திரனையும் கிரகங்களையும், நக்ஷத்திரங்களையும் உதவினுர்.

இவைகளை மாத்திரமா, உயிர்களாகிய நாம் வசித்தற்கு ஒன்பது வாசல்களையுடையதும், எழும்புதல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என்னும் ஐவகைத் தொழில்களைச் செய்வதும், ஆகிய ஒரு நடை வீட்டையும் உதவினுர். இவற்றையெல்லாம் கொடுத்து இவைகளை அறிந்து அனுபவிக்கும்படி, அறிவையும், அறிவினுலே ஆன்ம சுகத்தை அடைதற்குக் காரணமாகிய ஞானத்தைப் பெறும்படி வேதாகமங்களையும் உதவினுர். அது மாத்திரமா. உயிர்க்குயிராய் நின்று உணர்த்துதலையும் செய்கின்றுர்.

இவ் வியல்புடைய கடவுளுக்கு நாமும் இவ்வுலகமும் அடிமைப் பொருள்களும் உடைமைப் பொருள்களுமாம், ஆதலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நமக்கு ஆபத்துக் காலத்திற் செய்வனவும், கைம்மாறு கருதாதுசெய்வனவும், செய்யாமற் செய்வனவும்ஆகிய இப் பேருதவிகளைக் குறித்து நாம் அவருக்குக் கைம்மாருகச் செய்யும் உதவி ஒன்றுமில்லை. ஆயினும், அக் கடவுளையும் அவர் செய்யும் நன்றிகளையும் இடைவிடாது சிந்தித்து அவரை எவரினும் மேலானவராக மதித்து, வழிபட்டுக்கொண்டு வருதல் ஆன்மாக்களாகிய நமக்குக் கடமையாகும்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
மூன்ரும் பாலபாடம்

---

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதாமாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும், தீதேயாயினும், அதுவே மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்

---

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசுரத்துரோகம்

கடவுளை நிந்தித்தலும், கடவுளை வழிபடும் முறைமையைப் போதிக்குங் குருவை நிந்தித்தலும், கடவுளுடைய மெய்யடியாரை நிந்தித்தலும், கடவுள் அருளிச் செய்த வேதாகமங்களை நிந்தித்தலும், இந்நிந்தனைகளைக் கேட்டுக்கொண்டிருத்தலும், தேவாலயத்துக்கும் மடாலயத்துக்கும் உரிய திரவியங்களை அபகரித்தலும், தேவாலயம், திருமடம், திருக்குளம், திருநந்தவனம் முதலியவைகளுக்கு அழிவு செய்தலும், ஈசுரத்துரோகங்களாகிய அதிபாதகங்களாம். மடாலயமாவது கடவுளை வழிபடுதற்கும், வேதாகம முதலிய நூல்களை ஓதியுணர்தற்கும், கடவுளை வழிபடுநெறியைப் பிறருக்குப் போதித்தற்கும், கடவுளுடைய அன்பர்களுக்கு அன்னம் கொடுத்தற்கும் உரிய தானமாம்.

ஸ்நான முதலிய நியமங்களில்லாமல் திருக்கோயிலினுள்ளே புகுதலும், திருக்கோயிலிலும், திருக்குளத்திலும் திருநந்தவனத்திலும், திருக்கோயில் வீதியிலும் மலசலங் கழித்தலும், எச்சில் உமிழ்தலும், திருக்குளத்திலே சௌசஞ் செய்தலும், தந்தசுத்தி செய்தலும், அசுசியோடு ஸ்நானஞ் செய்தலும் ஈசுரத்துரோகங்களாம்.

குடிகளுக்குச் செய்யுந் தீமையிலும் மகாராஜாவுக்குச் செய்யுந் தீமை மிகக் கொடியது: அது போலவே ஆன்மாக்களுக்குச் செய்யுங் துரோகத்திலும் கடவுளுக்குச் செய்யுந் துரோகம் மிகக் கொடியது. குடிகளுக்குச் செய்த தீமை இராசாவினுலே பொறுக்கப் படினும் பொறுக்கப்படும். இராசாவுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்படமாட்டாது. அது போலவே ஆன்மாக்களுக்குச் செய்த துரோகம் கடவுளாலே பொறுக்கப்படினும் பொறுக்கப் படும். கடவுளுக்குச் செய்த துரோகமோ பொறுக்கப்படமாட்டாது. எங்கும் வியாபகமாயிருந்து எல்லாம் அறியும் இயற்கை இல்லாதவனுதலால், இராசாவுடைய தண்டத்துக்குத் தப்பினும் தப்பலாம்; எங்கும் வியாபகமாயிருந்து எல்லாமறியும் இயற்கையுடையவராதலால் கடவுளுடைய தண்டத்துக்கோ தப்பமுடியாது. ஈசுரத் துரோகம் எவ்வகைப்பட்ட பிராயச் சித்தத்தாலும் தீராது.

ஈசுரத் துரோகிகளுக்கு, நரகத்திலோ இயம தூதர்கள் இரத்த வெள்ளஞ் சிந்தும்படி இரும்பு முனைகளை நெருப்பிலே காய்ச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையிலும், கண்களிலும், செவிகளிலும், நாசிகளிலும், வாயிலும், மார்பிலும் அறைந்து உடம்பு முழுதும் தாமிர முதலிய லோகங்களை உருக்கிய நீரைச் சொரிவார்கள். மயிர்க்காறேனும் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளை அழுத்துவார்கள். ஈசுரத் துரோகிகள் அந்தச் செப்புக் கடாரநெய்யிலே சந்திர சூரியர் உள்ளவரையும் குப்புறக் கிடந்து வருந்துவார்கள்.

இப்படி நரகதுன்பத்தை அனுபவித்தபின், பூமியிலே மலத்திற் கிருமி முதலியவைகளாய்ப் பிறந்திறந்து உழன்று, பின்பு மனிதப் பிறப்பை எடுத்து, வலி, குட்டம் கசம் நீரிழிவு, பெருவியாதி, மூலவியாதி முதலிய மிகக் கொடிய நோய்களினாலும் பசியினாலும் வருந்துவார்கள்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
நான்காம் பாலபாடம்.

கடன் படும் செல்வர்களிலும், கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாக்கை நிலையாமை

ஆன்மாக்களாகிய எங்களுக்கு இந்த மனித சரீரம் எதன் பொருட்டுக் கடவுளாற் கொடுக்கப்பட்டது என்பதையும், இது எவ்வியல்பு உள்ளது என்பதையும் நாம் யோசித்தல் வேண்டும். நாம் கல்வி கற்றுத் தரும் நெறியினாலே பொருளைத் தேடி வறியவர்களுக்குக் கொடுத்து நாமும், மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தார்களோடு உண்டுடுத்து வாழ்தற்கும், புகழ் புண்ணியங்களைச் செய்தற்கும், எவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களாய் மனம் வாக்குக் காயங்களினாலே தம்மை வழிபட்டு நல்ல கதியை அடைவதற்கும், ஆகவே கடவுள் மனித சரீரத்தை நமக்குத் தந்தருளினார்,

கடவுளையும், புண்ணியபாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுகதுக்கங்களையும் பகுத்தறியும் அறிவு மனிதர்களிடத்து இருத்தலால், அஃதில்லாத விலங்கு பறவை முதலிய பிறப்புக்களிலும் மனிதப் பிறப்பு மிக உயர்ந்தது. நாம் கீழுள்ள பிறவிகளையெல்லாங் கடந்து இம் மனிதப் பிறப்பை அடைவது மிகுந்த அருமை. இந்த அருமையாகிய மனித சரீரமுமோ அழிவுள்ளது. ஆதலினால் இது உள்ள பொழுதே இதனாலே தேடற்பாலனவாகிய கல்வி செல்வங்களையும் புகழ் புண்ணியங்களையும் தேடிக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாம்.

பலவித செல்வங்களையும் பெற்று அநுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே, மனிதர்களுக்கு மூப்பும் மரண வேதனையும் வருகின்றன, இவைகளோடு நோயும் வந்து சேர்ந்தால் இவர்கள் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? அப்பொழுது, பகுத்தறிவுள்ள மனிதர்கள், செய்வன இவை, தவிர்வன இவை, என்று அறியாது பிறருடைய சகாயத்தை விரும்பி, மிகுந்த வருத்தப்படுகின்றார்களே! மனைவி மைந்தர் முதலாயினோர் செய்யுஞ் சகாயங்கள் தாமும் அத்துயரத்தைத் தாங்கவல்லனவா! இல்லை இல்லை. இவ்வுடம்பின் நிலையாமையை நினைக்கும் பொழுதே நமக்கு ஏக்கம் உண்டாகின்றது. 'நேற்றைக்கு இருந்தான் இன்றைக்கு இறந்தான்' என்று கேட்டவுடன் மனம் நடுங்குகின்றது. நேற்று மணமகன் இன்று பிணமகன் ஆதலையும் எங்கள் கண்களே காண்கின்றன. எத்தனையோ பெரிய அரசர்களுடைய சரித்திரங்களைக் கேட்டிருக்கின்றோம். எத்தனையோ பெரிய வித்துவான்களுடைய நூல்களைப் படிக்கின்றோம். இவர்கள் எல்லாரும் இறந்தவர்களேயன்றி உயிரோடிருந்தவர் ஒருவரும் இலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இந்த உடம்பு அநித்தியமும் துக்கமயமுமாயிருத்தலாலும், இதனாலன்றி வேறொன்றினாலும், நமக்கு ஈடேற்றம் இல்லாமையாலும், யாவரும் இவ்வுடம்பு உள்ள பொழுதே கல்வி, செல்வங்களையும், அவற்றினாலே புகழ் புண்ணியங்களையும், சம்பாதித்தல் வேண்டும். கல்வி செல்வங்களைச் சம்பாதிக்கும் போது இறப்பில்லாதவர்கள் போலவும், தருமத்தைச் செய்யும் போது யமன் கையில் அகப்பட்டுக் கொண்டவர்கள் போலவும், எண்ணுதல் வேண்டும். இந்த நினைவிருந்தால் வாழ்நாள் வீணாகமாட்டாது; நிலையில்லாத மனித சரீரத்தாற் பயனை அடைந்தவரும் இவரேயாவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
மூன்றாம் பாலபாடம்

---

**உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே, அது கண்ட உன் பிள்ளைகளால் உனக்கும் கிடைக்கும்.**

**ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரை வழிபடல்.

பிதா, மாதா, குரு, உபாத்தியாயர், தமையன், தமக்கை, மாமன், மாமி, பெரிய தகப்பன், சிறிய தகப்பன், முதலாகிய இவர்கள் பெரியோர்கள் என்று சொல்லப்படுவார்கள். நம்மைப் பெற்று வளர்த்தல், அன்ன வஸ்திரந் தந்துதவுதல், கல்வி கற்பித்தல், நல்லறிவைப் போதித்தல், நமக்கு நோய் முதலியன வந்த காலத்தில் மனம் பரிதபித்து உதவி செய்தல் என்னும் இவைகளைச் செய்து நம்மைக் காப்பாற்றும் இப் பெரியோர்களையும், இவர்கள் செய்த நன்றிகளையும் ஒருபோதும் மறந்துவிடலாகாது. எப்பொழுதும் இவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, இவர்களை வழிபட்டுக்கொண்டு வருதல் வேண்டும்.

ஒருவேளை அப்பெரியோர்கள் நம்மைக் கோபித்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு, அவர்கள் சொல்லுக்கு அமைந்து நடத்தல் வேண்டும். அவர்களுக்கு முன்னே வெடுவெடுத்த சொல்லும் கடுகடுத்த முகமும் காட்டலாகாது. பெரியோர்களுக்கு அடங்கி நடத்தலாவது, அவர்கள் சொற்படி நடத்தலாம். கல்வியையும் நல்லொழுக்கத்தையும் கொடுக்கும்படி அவர்கள் சொல்லும் சொற்களைக் கேட்கக்கூடாத காலத்தும், அதை அவர்களுக்குத் தக்க மரியாதையோடு தெரிவித்து அவர்கள் மனசைத் திருப்தி செய்து ஒழுகல் வேண்டும்.

பெரியோர்கள் வீட்டுக்கு வந்தால் சீக்கிரம் எழுந்து எதிர் கொண்டு அழைத்து வந்து, ஆசனத்திலிருத்தி வழிபாடு செய்து, உபசரித்தல் வேண்டும். அவர்கள் இருக்கச் சொல்லுமுன் அவர்களெதிரே இருத்தலாகாது. அவர்கள் பேசுஞ் சொற்களைக் கவனமாகக் கேட்டு, அவைகளின் சாரங்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அவர்கள் யாதாயினுங் கேட்டால், நன்றாக யோசித்து மறுமொழி சொல்லல் வேண்டும். அவர்களோடு பேசும்போது தன்னைத் தாழ்த்தியும் அவர்களை உயர்த்தியும் பேசல்வேண்டும். அவர்களிடத்தில் இரண்டு கைகளினாலும் கொடுத்தல் வாங்குதல் செய்தல் வேண்டும். இப்படி நடக்கும் பிள்ளைகளுக்குப் பெரியோர்களுடைய ஆசீர்வாதமும், கடவுளுடைய அநுக்கிரகமும், ஆயுளும் கல்வியும், நல்லொழுக்கமும் அபிவிருத்தியாகும்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
நான்காம் பாலபாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலின் தன்மை

கடவுளை வழிபடுவதற்குரிய இடங்கள் மூன்று. அவையாவன: கோயில், சிவஞானிகள், இருதயம். இவற்றுள், சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது. அதை ஒரு பிறவியிலே ஒரு முறையேனுங் காணமாட்டாமலிருப்பதுமுண்டு. இருதய வழிபாட்டிலே கண் முதலிய பொறிகளேனுந் தலை முதலிய அங்கங்களேனும் தொழிற்படமாட்டா. இவைகள் சிவதொண்டிலே சென்றால் மாத்திரம் இவை தீயவழியிலே செல்லாமல் நிற்கும். எங்களுக்குள்ள எந்தக் கருவியையும் தீய வழியிலிருந்து விலக்குகில் அதை நேரே அடக்குவது மிக அரிது. அதற்கு நல்வழியைக் காட்டுவதே முறைமை.

''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்றார் திருவள்ளுவ நாயனார். ஆதலால் மூவகை வழிபாடுகளுள்ளும், எங்களுக்கு மிகப் பொருத்தமானது கோயில் வழிபாடே. மற்றவைகள் இதற்குத் துணையானவை. மூவகை வழிபாடும் அவசியமே. கோயிலானது பாதகன் முதற் சிவஞானி ஈறாக உள்ள யாவருக்கும் அவசியமானது. ஞானநிலையின் உச்சியை அடைந்து சீவன் முத்தரானவர்க்குக் கோயில் வழிபாடு மிக அவசிய மென்பது ஆகம முடிவு.

" செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇயன் பரொடுமரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே. "

என்று சிவஞானபோதங் கூறும். அப்பர் சுவாமிகள் முதலிய மெய்ஞ்ஞானிகள் தங்கள் திருச்செயலினாலுந் திருவாக்கினாலும் இதனை வலியுறுத்தியருளினர். கோயிலை மறந்தவர்கள் புலையரென்று உமாபதி சிவம் பாடியருளினார். *

சிவபெருமான் சிவலிங்கத்திலே சரியையிலுள்ளவர்க்கு மறைந்து நின்று அருள் செய்வார். கிரியாவான்களுக்கும் யோகிகளுக்கும் பூசிக்கும் போது தோன்றி நின்றருள் செய்வார். ஞானிகளுக்கு அன்பே தாமாய் எப்போதும் வெளிநின்றருள் செய்வார்.

---

* ஆதியின் மேல் உற்ற திருநீறுஞ் சிவாலயமுமுள்ளத்துச் சென்ற புலையர் பாற் செல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிலானது சைவசித்தாந்த உண்மைகளை உணருதற்குஞ் சாதித்தற்கும் இடமாயுள்ளது. நித்திய பூசையும் உற்சவங்களும் சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்களை விளக்குவன.

ஐந்தொழில் விளக்கப்பட முப்பொருளின் இயல்பு பெறப்படும் இவற்றை உற்சவ விளக்கத்திற் காண்க. சிவலிங்கம் *, நந்தி, பலி பீடமாகிய இவை, முத்தி முறையை விளக்கும். பலிபீடமானது பாவத்தை நீக்கும் சிவசக்தி யென்றும், சிவலிங்கம் சிவானந்தத்தைக் கொடுக்கும் சிவமென்றும், நந்தி என்பது முத்தியடைந்த ஆன்மா எனவுமறிக மலத்தை நீக்குவதாதலாற் பலிபீடம் பத்திரலிங்க மெனப்படும். பத்திரலிங்கமாவது மங்கலத்தை யுண்டாக்கும் லிங்கம் எனப் பொருள்படும். மங்கலமாவது பாசநீக்கம்:

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறெனநிற்கும்
ஆய பலிபீடமாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்து கொள்வார்கட்கே" - திருமந்திரம்

"தூலலிங்கமாந் தூபிசூக்குமமா முள்ளிலிங்க
மேலும்பலி பத்திரம்" —சைவசமயநெறி

"துள்ளுமறியா மனதைப் பலிகொடுத்தேன்" -தாயுமானவர்

சிவபூசையிலே தத்துவங்களின் தன்மையுந் தொடர்பும் அவற்றை நீக்கும் முறைமையும் விளங்கும். மாயாமலக் கழிவோடு அதைச் சார்ந்த கர்மக் கழிவுமாம்.

சகளீகரண சிவோகம் பாவனையால் ஆணவத்தை நீக்குஞ் சாதனையுண்டாகின்றது. இவைகள் சிவயோகப் பேற்றுக்குத் துணையாயுள்ளவை. சிவபூசையிலே காட்டும் ஒளிகளும் செய்யும் மணியோசையும் மத்தள ஓசை முதலியவைகளும், யோகத்திலே தோன்றும் ஒளிக்கும் ஓசைக்கும் இணையாமென்பர்.

---

* லிங்கம் (பிரபஞ்சத்தை) யொடுக்கி விரிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் மூன்று திருவீதிகள் உளவாயின் மூவகைச் சரீரங் களையும், ஐந்து திருவீதிகள் உள்ளனவாயின் மூவகை உடம்பை யும் ஆக்கும் ஐந்து கோசங்களையுங் குறிக்குமென்பர்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர் நெய்யட்டி யுயிரெனும் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா வெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

கோயிலிலே தீட்சை வகை — ஒருவர் தேடிய பொருளினாலாவது சரீர முயற்சியாலாவது பிரதிட்டை யிறுதியான தொண்டு செய்தல் சமயதீட்சை யென்றும், நித்திய நைமித்திய பூசை செய்வது விசேஷ தீட்சை யென்றும், திருவிழாச் செய்வது நிர்வாண தீட்சை யென் றும் (உத்தரகாரண) ஆகமங் கூறும்.

சு. சிவபாதசுந்தரம் B.A.
சைவக் கிரியை விளக்கம்

---

நாவை அடக்கி விக்கல் எழும் போது, ஒன் றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமை யாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும், மோஷத்திற்கு ஐது வாகிய புண்ணியத்தை விரைந்து செய்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ ஜய நீராவி வீரகத்தி விநாயகர்
# திருவிரட்டை மணி மாலை

நீர் நிறைந்த நீர்வாவி நின்மலனே நீளரக்கன்
ஏரழிய அட்ட இராமன்பால் சேர்பழியாம்
வீரகத்தி மாள உதைத்த விநாயகனை
ஓரகத்தே வைத்தே னுவந்து. 1

உவந்துன் னருள்வழி நிற்க வகையறி யாதுநெஞ்சம்
பவந்தரு வாழ்விற் படிந்து முழுகிப் பதைபதைத்து
துவந்துவந் தூய்மைகள் செய்யாது வீணே துரிசுபட்டேன்
சிவந்தரு வாழ்வு தருவாய்நீர் வாவிச் சிவக்களிறே. 2

களிறேநீர் வாவிக் கரசே கனிந்து
தெளிவந்த உள்ளத்துத் தேனே - இளிவந்த
வீரகத்தியை யுதைத்த விண்ணவனே உன்போல்வார்
ஊரகத்தே உண்டோ உரை. 3

உரைக்கடங் காஎனெம் மிறைவன் நீர் வாவி உறைபரமன்
புரையில் மனத்திடைப் புக்குநின் றெழும் புத்தமுது
கரையிலா இன்பக் களஞ்சியம் காட்சிக் கரியபொருள்
தரையிடை மற்றவன்றுட்கீ ழெமது தலைமறைவே. 4

மறைவனத் தேவீர கத்திவிமலன்
நிறைபுனல் நீர்வாவி நேடி - உறைவான்
தனையடைந்து தன்னடியார் தங்கள் மலங்கள்
வினை கடிந்து வீடு பெற 5

பெற்ற பிறவியமைந்த தெமக்குப் பெருந்துணையாய்
நற்றவஞ் செய்தோம் நறுமலர் கொண்டு நமன் வருமுன்
குற்றமில் நீர்வாவிக் கோட்டங்குறுகி குறைந்து நின்று
பெற்ற பயன்கொளப் போதுவம் வாரீர் பிணிகெடுத்தே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுமிவ் வுடலென்று துன்புறல் வேண்டா
படுபயன் கொள்ளப் பலித்த - சுடுமுன்னே
நீர்வாவிக் கோட்டத்து நீடும் விநாயகனைச்
சீர்பாடிச் சேர்வம் சிறந்து. 7

சிறப்பொடு கேடில்லை செல்வம் வறுமையிச்சீருலகில்
இறப்புப் பிறப்பில்லை எண்ணுவீ ரென்றும் விநாயகனை
மறப்பு நினைப்பில்லை மன்னுவீ ரெங்கும் மருவிநின்றே
உறைப்புற் றொருமையி லோங்குவீ ரென்று முலகினிலே. 8

உலகமாய் வேறுயுடனுமா யோங்கி
அலகில் பொருளிலு மாணை - இலகியிட
மன்னும் விநாயகனே மாற்றிப் படைத் தளித்து
துன்னும் தொடக்கறவே நின்று. 9

நின்று மிருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பொழியாய்
துன்று நீர் வாவித்துணை வன்றன் தூய துணைப்பதங்கள்
கன்றை நினைந்தெழு தாயெனச் சாந்து கசிந்துருகுகாய்
பொன்றும் வினைகள் புகலிடம் மற்றவன் பொன்னடியே. 10

அடிய ரொடுங் கூடேன் ஆம்பூசை செய்யேன்
படியினுக்கோர் பாரமாய்ப் பாழே - இடைகின்றேன்
வாழ்த்தும் வகையருளாய் வண்ணை விநாயகனே
தாழ்த்தினேன் சென்னி தணிந்து. 11

தணிந்து வணங்காத் தலையுநீர் வாவித் தலைவனென
பணிந்து மொழியாத நாவும் எனக்கே பரிந்தளித்தான்
திணிந்த மனத்துச் சிரநான்குடைய திசைமுகனும்
துணிந்தோர் சிரம்பட அந்நாட் டுணித்ததுந் தேர்ந்திலனே. 12

தேர்ந்த மறையின் தமிழ் செய்த மூவரும்
நேர்ந்த முறைகளை நேடினன் — ஓர்ந்திட
நம்பிக் கருளும் நீர்வாவி விநாயகன் றன்
தும்பிக்கை என்றுந் துணை. 13

துணையான சுற்றந் துணையல்ல என்று துணிந்து கொண்டோம்
அணையார் புனல்சேர்ந்த அண்ணல்நீர் வாவி அருமருந்தே
புணையாள னுமாம் போதுமவனே - புகலெனவே
இணையார் மலர்தீப மேற்றன கொண்டே இறைஞ்சுதுமே; 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைஞ்சினர்க் கின்ப மளிக்குமிறைவன்
நிறஞ்சிறந்து நீர்வாவி சேர்ந்தான் - அறஞ்சிறந்த
அண்ணலார் தாள்க ளணைந்தின் புறவல்லார்
நண்ணுவரோ மற்ருேரை நாடு. 15

நாடு நமக்கென ஒன்றில்லை ஞாலம் நமதுடைமை
கூடு முறவுங் குறிச்கில் குறைவில் குவலயமே
நாடும் பொருளும் நீர்வாவிப் பதியின் நலஞ்சுடரே
வாடும் பரிசு நமக்கில்லை என்றும் வருஞ்சுகமே. 16

சுகமலா வாழ்வைச் சுகமென்று கொண்டு
மகிழ்த லொழிவாய் மனமே — சுகம்வரும்
நீர்வாவிக் கோட்டத்து நீடும் விநாயகன்ருள்
சார்வாகச் சேரவே தான். 17

தானந்த மிலாத் தனிமுதல் எந்தை விநாயகனே
ஆனந்தன் நீர்வாவிக் கோட்டத்தமல னகிலமெலாம்
ஊனந்தவிர உறுபொரு ளுண்மை உளமதிலே
மோனந் திகழும் முனிவர் மனத்தன் முழுமுதலே 18

முதலும் நடுவும் முடிவும் அவனே
இதஞ்செய் நீர் வாவி இணைந்து சதமெனவே
தாழ்வா ரவர் கருமம் தன்கரும மாக்கொண்டு
வாழ்வானே வீரகத்தி மன் 19

மன்னுக நீர்வாவி மாநிலத் தோருக் கருள்பொழிந்து
மன்னனுஞ் செங்கோல் முறைசெய்க அந்தணர் ஆனினங்கள்
நன்மை பெருகுக நானிலம் வாழ்க நவைஒழிக
செந்நெல் விளைக சிறந்து வயலெலாம் நீர் நிறைந்தே 20

திருச்சிற்றம்பலம்

---

**நாம் சிற்றறிவு சிறு தொழில் உடையேம் ஆதலால் முற்றறிவு முற்றுத் தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி பாவ புண்ணியங்களை உள்ளபடி அறிதலும் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# நீர்வாவி வீரகத்தி விநாயகர்

# நான்மணி மாலை

காப்பு

நீர்வாவி மேவு நிமலனடிக் கீழடங்கி
சேர்வா மவன் புகழைச் செப்பவே - பார்மீது
நல்ல தமிழ்தருவான் நாடினர்க்கு நாடோறுஞ்
செல்லல் கெடவருளுஞ் சேய்.

சீராரு நீர்வாவிச் செம்மல் விநாயகனை
பேர்பரவி வாழ்த்துவாய் பேதைநெஞ்சே - சீராய்ப்
பெருகிடும் பேரின்பம் பெய்கழற்கீழ் நாளும்
அருகிடும் ஆள்வினை நோய். (1)

நோயின்மை வேண்டின் நுவலக்கேள் நெஞ்சமே நூனுவன்ற
பாய பரஞ்சுடர்ப் பண்ணவன் நீர்வாவி மேவிநின்ற
சேயைச் சிவனார் சிறுவனைச் சிந்தையுட் சேர்த்திடுவாய்
போயறும் பாவ வினையவை போகம் பெருகிடுமே. (2)

பெருகிய அன்பு வேண்டும் பேரருட் பெரும உன்பால்
உருகிட வேண்டுமுள்ள மொருங்கிட வேண்டுஞ் சிந்தை
பருகிட வேண்டும் பாத பங்கய மூறு தேனும்
அருகிட வேண்டு மாசை அருள்வீர கத்தியப்பா. (3)

அப்பனல் வளிவா னருக்கனு மதியும்
செப்பிய நிலனு மியமா னனுமென
அட்ட மூர்த்த மாவன் விநாயகன்
துட்ட வரக்கன் தொலைய வடர்த்த
இராம னடைந்த விரும்பழி யான
வீரகத்தியை விறலுட னுதைத்தான்
வீரகத்தி விநாயக னமர்ந்த
நீர்வா விப்பதி நேர்படச் சென்றே
ஆர்வ முடனே அர்ச்சனை புரிய
பார்மிசைப் பழிகள் பறையும்
தீரா நோயுந் தீர்தல் திடமே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமாக மேவியே தீர்த்த நீர் வாவித்
தடங்கரையே சார்ந்திடுந் தாணு - படமாக
நெஞ்சத் தெழுது நிறை மாந்தர்க் கெஞ்ஞான்றுந்
தஞ்சமாத் தன்ருள் தரும். (5)

தருக்கித் திரிவேன் தருக்கை யொழிக்கத் தருபிணிகள்
நெருக்கி யுடலை நிலைகெடச் செய்யுநீர் வாவியுறை
பருக்கை முகத்துப் பரமா பணிந்தே னின்பாதமலர்
ஒருக்கால் பிழைகள் பொறுத்தா லுனக்கென் னுறுவதுவே. (6)

உறுவன வந்த போதி லுளங்கவன் றிடுதல் வேண்டாம்
உமைசுத னருளே யன்றி வேறிலை யுளேத லேஞே
நிறைமன முடையார் வாழும் நீர்வாவிப் பதியில் மேவி
நித்தலும் போற்றல் செய்வாய் நீங்கிடும் கவலை யெல்லாம்
மறுவறு வல்லபைக்கு மணாளனை யென்றும் போற்றி
வாசவன் முதலோர் வந்து வாழ்த்துவர் தவருதென்றும்
அறைகழல் முறையா லேத்தி அருச்சனை புரிவாய் நெஞ்சே
ஆர்வத்தைப் பெருக்கி நாளும் அளவிலா அன்பு செய்தே. (7)

அன்பு செய்ய இன்பம் பெருகும்
துன்பந் தொலையும் தூய்மை துலங்கும்
நீர்வா விப்பதி நின்மல னடியிணை
ஆர்வ மீக்கூர அர்ச்சனை புரிகுவம்
உள்ள முயர்ந்திடு முணர்வு மொருங்கும்
அள்ளூ றுள்ளத் தாக்கை புரை புரை
கனியு பஞ்சுவன் காலனு மணுக
தேனு யமுதாய்த் தித்திக்கும்
வானவன் நாடும் வழிதிறந் திடுமே. (8)

திறம்பிய வாழ்வு சிறப்புற வேண்டின்
நிறைபுனல் நீர்வாவி நேடி — மறந்திகழும்
வீரகத்தி வீழ வினைசெய் விநாயகன்ருள்
ஈரமுற ஏத்தல் இனிது. (9)

இனியன பேசி இறைபணிநிற்கு மிருந்திறலோர்
நினைவினில் நீங்கான் நிறைவுடை நீர்வாவி நேர்ந்துறைவான்
தனையடை வார்தமை தன்னருள் நீழலில் சாரவைப்பான்
பினைப்பல பேசிப் பிதற்றுவ தென்ருன் பிரிவிலனே. (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியா மனத்தவர் பேரிரு ளோட்டி
பெருந்திரு நல்கும் பெருமையினுன்
கருமால் பிரமனுங் காணுதற் கெட்டான்
கணபதி நீர்வாவியினமர் வான்
அருவா யருவுரு வாயுரு வானவன்
அருள்புரிந் தன்ப ருளமுறைவான்
மருவார் மலரடி நல்குவ னெற்கும்
மதகரி யானைமுகத்தவனே. (11)

ஆனை முகவன் அரிய னெவர்க்கும்
ஊனையு ருக்கி உள்ளொளி பெருக்கி
சாருந் தவர்க்குச் சால எளியன்
நீர்வா விப்பதி நிறைந்த நிமலன்
விக்கினந் தீர்க்கும் விக்கின விநாயகன்
சக்கர தாரி தாழ்ந்து வேண்ட
சக்கர மீந்த சாந்த மூர்த்தி
சொல்லொடு பொருளெனத் தொடக்குற நின்ற
அவனெமை யாண்ட ஆதி முதலே. (12)

முதலே யெவர்க்கும் முடிவிலா ஒன்றே
கதியே கலந்தடைந்தார் காணும் -- பதியாக
மேவினுய் நீர்வாவிக் கோட்டத்து மேவிநின்று
பாவிக் கருளாய் பரிந்து. (13)

பரிந்தடைந் தேனுனைப் பாற்றுவா யென்றன் பவவினைநோய்
திருந்துநீர் வாவிச் செழும்பதி மேவிய தேசிகனே
திருந்தல ருய திறலவு ணன் விழக் கோடொடித்தாய்
பிரிந்தறியா வுன்றன் பேரரு ளெற்குப் பெருந்துணையே. (14)

துணையாய தொல்லுருவன் தூநெறியே காட்டிநீர் வாவிமேவி
பணிவாரைத் தாங்கிடுவான் பாரெங்கும் மாகியே பரவிநின்று
புணையான வருள்வழியே போயிடுவீர் நெஞ்சினீர் புன்மைநீங்கி
திணிவாய கருமலத்தைத் தேய்த்திடுத லென்றென்று
மெளிதாமன்றே. (15)

எழில் நிறை நீர்வா விப்பதி இறைவன்
கழலடி கைதொழல் கடனும் மனமே
அமைதி யுறுவாய் அண்ணலை வாழ்த்தி
ஆடியு மோடியு மலைந்து பதைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதி யேது நிறைவுறு மனமே
பதைப்பதை யொழிநீ பரமனைப் பாடு
சிதைப்பன பிறவினை சேராதமைதி
இன்றே தொழுவாய் இன்னே தொழுவாய்
பொன்று முடலம் பொருக்கென இன்னே
மனைவி மக்கள் சுற்றமென் றலையேல்
எம்மா னிணையடி இறைஞ்சி
சும்மா விருந்து சுகம் பெறு மனமே. (16)

மனமொன்றி மாசிலா மால்மருகன் பாதம்
தினஞ் சேவை செய்யாச் சிறியேன் - தனந்தேடி
ஓடாமல் நீர்வாவி உத்தமனே உன்னையே
நாடேனோ நாளும் நயந்து. (17)

நயந்துநீர் வாவி விநாயகனுமம் நவிலகில்லேன்
வியந்தவன் கோயில் வலம்வரேன் வீணே கழிந்தன நாள்
உய்யும் வழி காட்டாய் உமைபாலா உத்தம நாயகனே
கயமுகன் சாயக் கறுவிய நாத கணபதியே. (18)

கணபதி கழலிணை கருதுவர் பெரியர்
கற்றது நின்றுகவி னுறவதிவார்
மணநிறை மலர் கொடு மறைமுறை பணிவார்
மஞ்சனமாட்டி மலிவிளக் கெடுப்பார்
குணநிறை யவரொடு குலவிடு மனத்தார்
குவலய மவனெனக் குறிகொளு நெறியார்
பிணிபடு முடலினைப் பொருளென மதியார்
பிறிதுடை யவர்திடம் பெருநெறி பெறுவார். (19)

பெறவுள பொருணீ பெரும் பெயர் விநாயக
உறுபொரு ளுளவோ உன்னை யன்றி
மலரிடை மணநீ மதுவிலின் சுவைநீ
மணியிடை ஒளிநீ மண்ணி னூற்றநீ
நீரிலின் சுவைநீ தீ யிடை ஒளிநீ
வளியிடை யூறுநீ வெளியிலோசை நீ
அருக்கனில் வெம்மைநீ அம்புலித் தண்மைநீ
வான் பொழி மழைநீ வருபொரு ளெலாம்நீ
நீர்வா விப்பதி நிமல
பார்வாழ் வெய்தநீ பரிந்தருள் புரியே. (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிசை சூழ் நீர்வாவி புக்கமரும் போதன்
கரிமுகவன் கண்ணுதலைக் காணுக் - கரிய வென்கண்
நீர் சோர்ந்த அந்தோ நிறைகெட்டே னென்செய்கோ
வார்கடலும் வாட்டுமே வந்து. (21)

வந்தெனக்கு மையல் தருகின்றான் நீர்வாவி மாமுகவன்
பந்தங்கள் நீக்கி பலமொழிகள் பேசிப் பார்ப்பதென்னே
தந்தமரென் றென்னைத் தார்மாலை தந்து தடுத்தணைப்பான்
நொந்த நிலைமாற நூல்கள் பலவும் நுவன்றிடுமே. (22)

நுவலுதற் கரிய நுண் பொருளானை
நோக்கினு நோக்கிற் கப்புறத் தானை
கவலைக டீர்க்கும் கரிமுகத் தானை
கந்தனை வள்ளி சேர வைத்தானை
குவலயக் கோனுய்க் கோதறுப் பானை
கும்பிடு வார்தங் குறிநிலை யானை
அவலம றுக்கும் மமுதனை யானே
அந்தனீர் வாவி கண்டு கொண்டேனே. (23)

கண்டங் கரிய கண்ணுதல் காதல
அண்ட மனைத்து மகட்டி லடக்கினை
பேழை வயிற்றுப் பெரும் பெயரான
நாளு நின்னை நயந்தெலி சுமக்கும்
சின்னஞ் சிறிய சீருடை எலிதான்
நின்னைச் சுமக்கும் வகை யெவ்வாறே
பெரியதிற் பெரியை சிறியதிற் சிறியை
பேருருக் கொண்டு பேணுவை அனைத்தும்
நுண்ணிய உருவில் நுணுகி நுழைந்தனை
உன்னுடை நிலையை உலகிலா ரறிவார்
நீர்வா விப்பதி மேவி
ஆர்வலர் ஏத்த அளிப்பைநின் அருளே. (24)

அருளிற் றிளைக்கு மடியார்க் கறிவாய்
மருவி மனத்தி லினிமை - தருவான்
நிலையா யமர்ந்தருளி நீர்வாவிக் கோட்டங்
கலைஞான மீயுங் களிறு. (25)

களிவந்த சிந்தை கலந்தநீர் வாவிக் கனியமுதே
துளிதேன் னிறைமாலை தாராதொழியி லுயிர் விடுவேன்
பழியுமுனை வந்து சூழும் பலரும் பழித்திடுவார்
நெளியர நீட்டரைக் கச்சா யசைத்திட்ட-நின்மலனே. (26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்மலனை மறவாதார் நினைவகலா விநாயகனை
நினைகிலேன் பொல்லாப் புலையனேன்
என் வினைதான் னீங்குவது மெந்நாளோ எம்பெருமா
னினைக்கின்றேன் ஆளுந் தரமதோ
பன் மலர்க ளவை தூவிப் பணி செய்யே னுயிடினும்
பண்பாளா நின்று டுணையதே
புன்மையுள பொறுத்திடுவாய் பொருளல்லாப்
புன்மையனைப்
பொன்னடிக்கீழ்ப் புல்ல வைப்பதென்றோ. (27)

வைப்பிடம் வண்ணை நீர்வாவிப்பதி
துய்ப்பது சுமுகன் துணையடி இன்பம்
பெருநிதி வேண்டார் மாசு நிறைந்தன
வழுவிடத் தரியார் கழலடிச் செல்வம்
விழுமிய துறுவார் வீர முடையார்
ஆரங் கண்டிகை அணிவது பூதி
உண்பது பிச்சை உடுப்பது கந்தை
உறைவ தம்பலம் ஊரு முலகம்
சேர்வ தடியார் சிறந்த கூட்டம்
இவரடி எய்தி நாளும்
பவவினை போக்கிப் பண்புறல் மாண்பே. (28)

மாண்ட மனத்தார் வந்திறைஞ்சு நீர் வாவி
ஆண்டகையை ஆரா அமுதினை - காண்டகு சீர்.
எம்மானே எந்தை பெருமானே என்றென்று
சும்மா இருக்கை சுகம். (29)

சுகம் பெறச் சும்மா இருத்தலை விட்டுத் துருதுருத்து
சகமுழு தோடுஞ் சழக்கனேன் சாந்த முறுவ தென்றோ
திகழுநீர் வாவிச் செழும்பதி சென்று மன மொருங்கி
நகைமலர் கொண்டு வழிபடிற் சாந்தம் நனிவருமே. (30)

வருவன கண்டு மனமாழ்கும் மதியிலி நெஞ்சே மாழ்கேல்முன்
புரிவினை தந்த பயனுகப் புண்ணிய மூர்த்தி செயலிது காண்
பரிவொடு மவனை நீர்வாவிப் பதியிடைச் சென்று பணிவாயேல்
வருவினை போக மன மோங்கும் மருவிடும் உணர்விற்
சிவபோகமே (31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர உணர்வில் வருஞ்சிவ போகம்
இணையி லனுபவம் இயம்ப வரியது
ஐம்பொறி கொண்டு அறிய எட்டாதது
உம்பரு முணர இயல்வது அன்று
நீர்வாவி நிமலற் சார
ஆரவந்திடும் அறிவாய் நிறைந்தே. (32)

நிறை மனனோடு வழிபடு நீர்மை
மறையவர் வேண்டும் வரங்கள் -- நிறைவா
தருவான்நீர் வாவித் தலைவன் தாள்கள்
கருதினின் றேத்தல் கடன். (33)

கடமை வழுவாக் கடப்பாட்டி னர்கள் கலந்தவன்பால்
முடியடி சேர்த்தி முறைமையினலே வணங்குகின்றார்
படிமிசை நீர்வாவி மன்னு நிமலனைப் பாவவினை
பொடிபடப் பொய்மைகள் போயிட ஞானம் நணுகிடவே (34)

நண்ணிய மெய்த்தவ வேடமொடு நற்றவர் நாளுநயந்தணைவார்
புண்ணிய நீர்வாவிப் பதியை பொற்புறு சிந்தை கரைந்துருகி
எண்ணிய வேண்டி இரந்திடுவார் எந்தைபிரானெனஏத்திடுவார்
பண்ணிய பாவம் பற்றறுப்பார் வந்த பிறப்பின் பயன்
பெறுவார். (35)

பெறுதற் கரிய பேறு தருவாய்
உறுவ துறுக உனைச்சர ணடைந்தேன்
விக்கின விநாயக விமல சரணம்
நக்க நம்ப நாத சரணம்
உள்ளத் துயர்வு தருவாய் சரணம்
கள்ளங் கழிக்குங் கணபதி சரணம்
அன்பு பெருக அருள்வாய் சரணம்
நன்புல னென்ற நல்காய் சரணம்
உலகஞ் செழிக்க உதவுவாய் சரணம்
பலரும் வாழப் பணிப்பாய் சரணம்
நீர்வா விப்பதி விமல
சரணம் உன்னைத் தருவாய் எனக்கே. (36)

எனக்குறு நோய்கழிய என்னைப்புரக்கும்
பணைக்கைப் பரமா பதியே — மனக்கினிய
வள்ளல் நீர்வாவி மருந்தே யுன்கழல்
உள்ளத்து வைத்தேனுவந்து. (37)



UNIVERSITY OF JAFFNA SRI LANKA 235.4 SRI AR
ARCHIVES
249700
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவந்துனைச் சேர்ந்த ஒருதனி இன்பினை உன்னுதொறும்
நவநவ மாயெழு நல்லுணர் வென்றுரல் நவிலவற்றே
சிவந்தரு நீர்வாவி சேர்தரு நாதனே செம்பொருளே
புவந்தரு பெம்மான் புராதன போத புரவலனே. (38)

போத நிறைவுறு பூதி அணிபவர் மனமுநிலையுற அடைவாராய்
நாத நினதடி யோகமை வெருவுற நலியும் வினைகெட
அருள்தாராய்
ஆதி முதலென அண்மி அடைவுறு தன்மை நிலவிய நீர்வாவி
தீதில் பதியிடை சேர்வரவரெமை ஆளுந் தகையின ராவாரே.

ஆவதளிக்கும் அண்ணல் வாழ்க
போவதுநீக்கும் பொற்பு வாழ்க
வினைகெட நோக்கும் விநாயக வாழ்க
தனதடி நல்குந் தம்பிரான் வாழ்க
அகிலம் அளிக்கும் அமுதே வாழ்க
திகிலைக் கெடுக்குந் தேவே வாழ்க
விண்ணும் வாழ்க விரைமழை பொழிந்து
மண்ணும் வாழ்க மலிவளம் மல்கி
ஆனினம் வாழ்க ஆன்பால் பொழிந்து
மன்னன் வாழ்க மனுமுறை நின்று
பல்லுயிர் வாழ்க பண்பு நிறைந்து
தீமை ஒழிக நன்மை நிறைக
நீர்வாவிப் பதி நீடி வாழ்க
பூதி சாதனம் பொலிந்து வாழ்க
வாழ்க அடியவர் வயங்கு சீருடனே. (40)

திருச்சிற்றம்பலம்

நேற்றைக்கு உளன் எனப்பட்டான்
இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும்
உன் உயிர்க்குப் பயன்படுவற்றைச்
செய்யாது, வீண் நாட்களிப்பது, ஐயையோ,
எவ்வளவு அறியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# வண்ணை நீர்வாவி வீரகத்தி விநாயகர்

# அட்டக மாலை

### கொச்சகக் கலிப்பா

சீர் நிறைந்த செங்கனகக் குன்றே சிவகுமரா
நீர்வாவி மேவுகின்ற நிறையமுதே நறுந்தேனே
பாரின்மிசை யுன்னையன்றிப் பற்றுக் கோடாருளரே
நார் மிகுந்த சிந்தையொடு நண்ணினேன் நின்னடியே. (1)

### கட்டளைக் கலித்துறை

அடியாரிடர் கெடுத்தானந்தஞ் சேர்க்கு மரும்பொருளை
நெடுவானிறை புனனீர்வாவி மேவி நிலையமுதை
படிதானிலாத பனிமலை வல்லிதன் பாலகனை
கடமார் களிற்றைக் களிதூங்க வுள்ளத்தே கண்டனனே. (2)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கண்களிநீர் பாய்ந்தோட கரகமலமிசை குவியக் கலந்தவன்பு
உண்ணிறைய வெந்நாளு முன்னடிக்கே யாளாநா னுய்ய வேண்டும்
நண்ணரிய நலநீர் வாவிப்பதிவாழ் நன்மருந்தே ஞானமூர்த்தி
எண்ணரிய வின்னமுதே யெழிலார்ந்த விபமுகனே யெந்தாயீசா (3)

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஈசர்க்கு யான் செய்யும் விண்ணப்ப மொன்றுண்டு
கேட்டிடுவீரதைச் செப்பிடுவேன்
நாசெற்று விக்குள் மிக்கெழ நன்புல
னைந்து மொடுங்கிட நான் மயங்கி
பேசற்கு மொண்ணு நிலைவரும் போதெனை
யஞ்ச லென் பீர்பேழை வயிறுடையீர்
தேசற்ற வீர கத்தியை யன்றுதை
செய்தி ிராமன் பழிகெடவே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வேதங்களெந் நாளும் விரும்பி வாழ்த்தும்
விண்ணவனே விநாயகனே விமல மூர்த்தி
சீதங்கொள் நீர்வாவி சேர்ந்த சேயே
செம்பொருளே சீரியனே செந்தேன் பாகே
பாதகங்கள் பல செய்து பணிதல் செய்யாப்
படுவினையேன் பாவங்கள் பாறப் போக்கிப்
பேதமற வுன்னடிக்கீழ்ப் பேணிக் காத்துப்
பிரிவில்லா நிலை தருவாய் பெரிய பேறே. (5)

### பதின் சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பேறு தந்தெனை யாண்டருள் பிரணவப் பொருளே
பெருத்த தொந்திசே ரைங்கர முடையதோர் பெரும
மாறிலென்வினைப் பயனவை யருத்திடு மருந்தே
மருவி யென்னுள் மயக்கற மன்னிய மணியே
ஊறி யென்னுளங் களிப்புறு முவகையங் கடலே
உன்னி யுன்னடி யென்றுமே மறந்திடல் செய்யேன்
வேறின் றென்றியே விரவியென் சிந்தையு ணின்றால்
வேறினிப் பெறு பேறுதான் யாதெனக் குளதே. (6)

### பன்னிரு சீர்கழிநெடில்டி ஆசிரிய விருத்தம்

உள்ளத்தை யொருங்க வைத்தே யுன்றிற மோர மாட்டேன்
ஊனினை வளர்க்க வேண்டி யுலகெலா மலையலுற்றேன்
உள்ளுவ வொருபல் கோடி யுள்ளுறு சாந்தங் கெட்டேன்
ஊத்தையே னுய்வ தெங்ங னுறுதுய ரடைவதல்லால்
வள்ளலே வீரகத்தி விநாயகா வைய மாள்வாய்
வந்தெனக் குறுதி தந்துன் வளமெலாம் வழங்கல் வேண்டும்
கள்ளமே பேசுவேற்குக் கதியு மொன் றுண்டு தானோ
கையது பாச மேந்துங் கணபதீ கருணை மூர்த்தீ. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கருணையி னுருவே களிற்று மாமுகனே கண்கள்
மூன்றுடையதோர் கனியே
கைகளைந் துடையாய் கனகமால் வரையே
கருமலங்கழி கணநாதா
கருவிநூல் கொண்டு காணுதற் கரியாய் கருத்தொருப்
படுநருக் கெளியாய்
கற்பக தருவே கண்ணினுள் மணியே களிதரு
முளத்துறு கரும்பே
உருகிட வுள்ள முடல்புள காக வுன்னடி
தஞ்ச மென்றடைந்தேன்
உறுதியில் லரசு மும்பர்தம் வாழ்வு மொருபொரு
ளெனவுளங் கொள்ளேன்
வருவன வருக வண்ணநீர் வாவிப் பதியுறை
விநாயக மூர்த்தி
மற்றவை யஞ்சேன் வருவன வெல்லாம் மருவிய
வுனதருட் சீரே.

திருச்சிற்றம்பலம் (8)

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும் போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக் கொள்ள மாட்டோமே.

* *

நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும்; பயில்வோமாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# வண்ணை

# ஸ்ரீ ஜயநீர்வாவி வீரகத்தி விநாயகர்

## திருப்பள்ளியெழுச்சி

ஐந்துகரவனைத் தந்தி முகவனைச்
சிந்தை செயவருஞ் சந்தத் தமிழே.

அலைகடன் மீமிசை யுதித்தன னருக்கன்
ஆரிருள் புலர்தரப் பரந்தது புத்தொளி
நிலவிய வெள்ளிக ணிறையொளி மறைய
நிலவொளி குன்றிட நாணினன் பிறைமதி
புலருமுன் னெழுதரு பூசுரர் முறையால்
பூவொடு புகையொளி காட்டிட வந்தார்
புலவர்கள் போற்றிடு விநாயக மூர்த்தி
புகர்முக னேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

போது புலர்ந்தது புள்ளின மார்த்த
பொய்கை நிறைந்திடு கமலங்கள் மலர்ந்த
நாத முழங்கின நன்மணிச் சங்கு
நாத சுரத்தொடு நல்லியம் பலவுந்
தீதறு முனிவரர் செறிந்தன ரீண்டி
செம்மைகொள் மனத்தினர் திருநிறைச் செல்வர்
கோதில்நீர் வாவியம் பதிவதி வானே
குழக னேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

அஞ்சலி கூப்பிய கையின ரொருபால்
அருமறை யுரைசெயு மந்தண ரொருபால்
பஞ்சடி போத்துநின் றுடின ரொருபால்
பருவரல் மொழிதரு பாவைய ரொருபால்
நெஞ்சினி நிறைதரு நிலையின ரொருபால்
நிலத்திடை விழுந்தெழு நிரரு மொருபால்
மஞ்சிவர் வண்ணையம் வளம்பதி மேய
மழகளி றேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிய சிந்தைய ருள்ளுறு மொளியே
சீர்ந்திட வில்லவர்க் குணர்வரி யானே
என்னுடை யன்பினுக் குறுகுறி யானே
ஏரம்ப வோர்க்கொம்ப விபமுக மணியே
வன்றிறல் வீரகத் தியையுதை செய்தானே
வருவன வஞ்சிலன் வல்லபை பங்கா
துன்றுனீர் வாவியம் பதியிடைத் துலங்கும்
தும்பிமு காபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

நீர்நிலன் றீவளி வானிரு சுடரும்
நீடுயி ரெட்டெனு வகைபுணர் வானே
ஓர்பவ ருளத்திடை யொளிர்தரு முணர்வே
உருகத வில்லவ ரறிவினுக் கெட்டாய்
பேர்பர வினர்தமைப் பிரிவறி யாதாய்
பெரியவர் பலருனைக் காணிய வந்தார்
ஆர்வல ரேத்தின ராடிநின் றுர்கள்
ஆனைமு காபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

என்றனை யாளுடை யிபமுகத் திறையே
எல்லையொன் றற்றதோர் கருணையங் கடலே
கன்னறேன் பாலொடு கனியென வினிக்கும்
கஜமுக கணபதி கற்பகக் களிறே
பன்னிநின் றேத்தினர் படிறது களைவாய்
பணிசெய மருவினர் வண்ணையம் பதியிற்
றுன்னிடுஞ் சுடர்விடு சோதியே தூயா
தும்பிமு காபள்ளி யெழுந்தரு ளாயே. (6

காரிருள் மூடிடக் காண்கில னுன்னை
கருவதிற் புகுந்துழன் றல்லலிற் பட்டேன்
பேர்ந்திடும் வழியவை யொன்றையுங் காணேன்
பேயனே யெனினுமுன் றிருவருள் காட்டாய்
தீர்ந்திடு மன்பர்த மன்பதே வேண்டும்
தீர்த்தனே வீரகத் தியையுதை செய்தாய்
ஆர்ந்தநீர் வாவியம் பதியுறை யரசே
ஆனைமு காபள்ளி யெழுந்தரு ளாயே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலொடு முடிவது நடுவுமே யானாய்
முகுந்தன நகையவள் வல்லபை மணாளா
நிதியொடு சுற்றமுந் துணைவனு நீயே
நிலைதள ராவகை நிறுவுதல் வேண்டும்
மதியின ரணைதரு விநாயக மூர்த்தி
மருமலர் பலகொடு வந்தனர் வணையம்
பதியிடை நின்னெழில் காணிய விழைந்தே
பரமனேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

ஆகுவை யூர்தரு மருமறை முதலே
அரியய னாதிய ரறிவதற் கரியாய்
பாகன மொழியவள் வல்லபை பங்கா
பழமறை யந்தணர் போற்றிடு புலவா
ஓகையொ டுனதடி காணிய வந்தார்
உருகிய சிந்தைய ரொழுகிய விழியர்
சாகர மனையநீர் வாவிய மர்ந்தாய்
தந்திமு காபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

புலவரை வாட்டிய புகர்முக வவுணன்
பொன்றிடக் கொம்பொடித் தெறிதரு போதா
மலமிலர் மனமகிழ் மங்கல ரூபா
மதிமுக வல்லபை வலனமர் சுமுகா
மலர்புனல் புகையொழி யவியவை கொண்டு
மருவினர் மறையவர் மறைமுறை யேத்த
கலையுணர் வதுகொடு காணுதற் கரியாய்
கணபதி யேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

திருச்சிற்றம்பலம்

ஒருவன் எவ்வெப் பொருளினின்றும் நீங்கினானோ, அவன் அவ்வப் பொருளினால் வரும் துன்பத்தை அனுபவித்தல் இலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

வண்ணை

# ஸ்ரீ ஜய நீர்வாவி வீரகத்தி விநாயகர்

## எச்சரிக்கை

திருச்சிற்றம்பலம்

1) இணையில்லதொ ரிப மாமுக விறைபே — எச்சரிக்கை
கணநாயக கயமாமுக கதியே — எச்சரிக்கை
2) நீர்வாவியி னிறைவாகிய நிமலா — எச்சரிக்கை
சேர்வாகிய சிறுமை கெட அருள்வாய் — எச்சரிக்கை
3) கயமாமுக வவுணன்னுரங் கிண்டாய் — எச்சரிக்கை
நயமாவுரை செய்வாருள நீங்காய் — எச்சரிக்கை
4) வீரற்றெறு பழிபோயிட வுதைத்தாய் — எச்சரிக்கை
சீரற்றவர் சிந்தைக்கிரு ளானாய் — எச்சரிக்கை
5) கடமாமுக எனவோதிடக் காப்பாய் — எச்சரிக்கை
நடமார்தரு நம்பீசிவ குமாரா — எச்சரிக்கை
6) தொந்தோமென நடனம்புரி துணைவா — எச்சரிக்கை
சிந்தாகுலந் தீர்க்குஞ்சிவ களிறே — எச்சரிக்கை

திருச்சிற்றம்பலம்

## லாலி

திருச்சிற்றம்பலம்

1) லாலி லாலி லாலி லாலி லாலி
ஐங்கர முதலே அம்பிகை பாலா லாலி
2) சங்கு சக்கர தாரி மருகா லாலி
எங்கு நிறைந்த வெங்க விநாயக லாலி
3) அங்குச பாசா வாதி முதலே லாலி
பொங்கு சித்தி புத்தி சமேதா லாலி
4) குடமுனி கரகங் கவிழ்த்தாய் லாலி லாலி
கடகரி முகனே கணேச மூர்த்தி லாலி
5) சர்ப்பா பரண சாந்த சொரூபா லாலி
அர்ப்பண முனக்கே ஆக்கிட வருள்வாய் லாலி
6) கற்பகக் களிறே களிதரு தேனே லாலி
பொற்பத மேத்தப் புரந்திடு முதலே லாலி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

திருச்சிற்றம்பலம்

1) வல்லபை பங்குறு வள்ளல் — பராக்கு
நல்லவர் தொழுதெழு நாதா — பராக்கு

2) விக்கின விணுயகா விகிர்தா — பராக்கு
செக்கரஞ் சடைமுடி சுமுகா — பராக்கு

3) கடகரி முகமுடைக் களிறே — பராக்கு
தடமருப் பொன்றது வொடித்தாய் — பராக்கு

4) கஜமுக வவுணனைக் கறுத்தாய் — பராக்கு
சயமுட ஞெகென வூர்ந்தாய் — பராக்கு

5) ஐங்கரா வம்பிகை பாலா — பராக்கு
சங்கரன் றருமொரு தாணுவே — பராக்கு

6) வண்ணை நீராவியம் பதியாய் — பராக்கு
எண்ணருங் கணங்களுக் கிறையே — பராக்கு

திருச்சிற்றம்பலம்

# மங்களம்

திருச்சிற்றம்பலம்

1) மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்

2) விக்கினங்கள் தீர்க்குமெங்கள் விகிர்தனுக்கு மங்களம்
முக்கணெந்தை முன்னளித்த முதல்வனுக்கு மங்களம்

3) பக்தி கொண்டு பரவநின்ற பண்ணவற்கு மங்களம்
சித்தியானை முதல்வனுக்கும் வல்லபைக்கும் மங்களம்

4) ஆனிரைக்கு மந்தணர்க்கு மரசர்க்கும் மங்களம்
ஞானியர்க்கு மருமறைக்குந் திருமுறைக்கும் மங்களம்

5) நித்தியம் மழை பொழிந்து நிலவிவாழ்க வையகம்
பக்தியூடு பயிர் செழித்துப் பல்கிமல்க வெங்கணும்

6) பூவுளார்கள் பூசலின்றிப் புணர்ந்து நிலவிவாழுக
தேவகோட்டஞ் சிறந்தபூசை விளாக்களோடு பொருந்துக

7) மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைரவ சுவாமி



வைரவர் சூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விருத்தம்

## வெண்பா

ஆரா வமுதனைய ஐங்கரவி நாயகனார்
நீரா வியடிஓர் நீள்மரபுப் — பேராார்
சிறிஜய வீரகத்திச் சேயாய் அருட்சீர்
நிறீயெழல் சித்தி நிகழ்வு.

## விருத்தம்

ஏரகத்துப் பெருழவர் சீரமைந்த ஞாங்கர்
ஈழமதில் வேழவெழில் தாங்கும்
ஊரகத்து வாரணத்தின் ஓரமைவர்ய ஓங்க
ஓமெனுமந் நாதவொலி ஆங்கண்
நீரகத்து வாவிசெறி நேர்வலயப் பாங்கில்
நீதிமுறை வேதநெறி நூங்க
வீரகத்தி மாவிநாய கர்கும்ப தீர்த்தம்
மேதினியில் மாத மழைச் சீர்த்தியே.
மண்டலநல் நாற்பத்தெட் டமைந்த நாட்கள்
வண்ணேநகர் நாற்பக்கத் தெழுந்த பூக்கை
கொண்டவடி யார்பற்றிக் குழைந்து வேட்பக்
குஞ்சரத்து மாக்கைக்கொம் பொடிந்த சேய்க்குத்
தண்டமிழிற் சாற்றிப்பண் விழைந்த பாக்கள்
சந்தவித்தி யாற்சித்தம நுழைந்து நோக்கப்
பண்டனேந்த நீர்க்குன்றில் எழுந்துக ணேசன்
பத்தர்க்குட் பேரின்பம் புரிந்து பார்ப்பரே.

— இறைஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விபூதி உருத்திராக்ஷம்

சைவபூஷணம் விபூதி உருத்திராக்ஷம் என்னும் இரண்டுமாம். சிவபெருமானையே பரமபதி யெனக் கொண்டு வழிபடும் ஒவ்வொருவரும் தத்தம் அன்பினிலைக்கு அடையாளமாகத் தரிக்கத் தக்கன சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்ஷம் என்பவைகளாம்.

**விபூதி:**

திருநீறு இருவகைப்படும். அவை வைதிக விபூதி, சைவ விபூதி. வைதிக விபூதியாவது வேத விதிப்படி செய்யப்பட்ட யாகங்களிற் பொடிபட்ட நீறாகும். அது புராதனி, சத்தியோசாதை என இருவகைப்படும். புராதனியாவது பிரமதேவரது ஓம குண்டத்தில் விளைந்தது. சத்தியோசாதை வேதியர்கள் வளர்க்கும் யாகங்களால் உண்டானது. அவை புத்தியை மாத்திரம் அளிக்கும். சைவ விபூதியாவது இருவினை யொப்பு மலபரிபாகம் உற்ற சிவசத்தினிபாதர்க்கு உரியதாய்ச் சிவாகம விதிப்படி சிவதீக்ஷை.செய்யப்பட்டஅக்கினியிற் பொடிபட்ட நீறும் அது புத்தியை யல்லாமல் முத்தியையும் கொடுக்கும் வி = மேலான ; பூதி = ஐசுவரியம்.

விபூதி யாவது நல்லிலக்கணமுடைய பசுவின் சாணத்தைக் கொள்ள வேண்டிய முறைப்படி கொண்டு, மந்திரங்களாலுருட்டி அக்கினியினாலே தகிப்பித்த திருநீறும்.

**விபூதி தரிக்கும் இடங்களும் அளவும்:**

உச்சி, நெற்றி, கழுத்து, மார்பு, நாபி, முழந்தாள்கள் இரண்டு, தோள்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு விலாப்புறம் இரண்டு, முதுகு என்னும் இடங்களில் தரிக்க வேண்டும். (16) இவற்றுள் விலாப்புற மிரண்டினையும் நீக்கிச் செவிகள் இரண்டினையுங் கொள்வதும், முழங்கைகளையும், மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வது முண்டு.

நெற்றியில் இரண்டு கடைப் புருவ எல்லை நீளமும், மார்பினுந் தோளிரண்டினும் அவ்வாறங்குல நீளமும்; மற்றைத் தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்த அணிதல் முறையாகும். இவ்வளவினின்று கூடினும் குறையினும் குற்றமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதி உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகையாகத் தரிக்கப்படும், உத்தூளனமாவது பரவப் பூசுதல், திரிபுண்டரமாவது முக்குறியாகத் தரித்தல். சிவ தீட்சையில்லாத ஆடவர்களும் பெண்களும் உச்சிக்காலத்திற்குப் பின் சலங் கூட்டாமல் உத்தூளனமாகத் தரிக்கக் கடவர். சிவதீட்சை பெற்றவர்கள் காலை, உச்சி, மாலை என்ற மூன்று காலங்களில் மாத்திரம் நீருடனே கூட்டித் தரிக்கக் கடவர். மற்றைய காலங்களில் நீர் சேர்க்காது உத்தூளனமாகத் தரிக்கக் கடவர்.

**விபூதி தரிக்கலாகாத இடங்கள்:**

சிவபெருமான் முன்னும், சிவாக்கினி முன்னும் ஆசாரியர் முன்னும் விபூதி தரியாதொழிக. தரிக்க வேண்டுமாயின் முகத்தை மாறியிட்டுக் கொள்க.

எவர் விபூதி தரியாது இருக்கின்றாரோ அவர் செய்யும் நற்கருமங்கள் நிஷ்பலமாகும். அவரது அறிவு, ஆசாரம், சத்தியம் தவம் குன்றும்.

**தரிக்கக் கூடாத விபூதிகள்:**

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், சிவதீட்சையில்லாதவர் கொடுத்த விபூதியும், கருநிற விபூதியும் செந்நிற விபூதியும், பொன்னிற விபூதியும், புகைநிற விபூதியும் தரிக்கலாகாது.

**உருத்திராக்கம்:**

**உருத்திரன் + அக்கம் = உருத்திராக்கம்:** சிவபெருமானது கண்

உருத்திராக்கம், பொன்நிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, கருநிறமணி எயன ஐந்து வகைப்படும். அவை ஒவ்வொன்றும் ஒருமுக மணிமுதல் பதினறுமுகமணியெனப் பதினறு விதப்படலால் எண்பது வகைப்படும்.

உருத்திராக்கத்தைத் தரிக்கும் இடங்கள் குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள் என்னும் எட்டுமாம். ஸ்நானஞ் செய்யும் காலத்தில் உருத்திராக்கம் தரித்தல் வேண்டும். ஏனெனில் உருத்திராக்க மணியிற் பட்டு வடியுஞ் சலம் கங்கா சலத்துக்கு சமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராக்கத்தைத் தரிப்பதேயன்றி மந்திரங்களைச் செபித்தற்கு மாலையாகக் கொள்ளுதலும் விசேடமாம்.

உருத்திராக்கங்களுட் சிறந்தவை ஒருமுகமுள்ள மணி, ஐந்துமுக மணி, பதினறு திருமுகமணி, பதினன்கு முகமணி என்பவைகளாம்.

உருத்திராக்க மாலை கொண்டு செபிப்போர்கள் பேருமணியென்னும் நாயக மணியை எண்ணிற் சேர்க்காமற் செபிக்கக் கடவர். செபிக்கும் போது துறவறத்தார் செபமாலையை மேலாகவும், இல்லறத்தார் கீழாகவும் தள்ளக் கடவர்.

உருத்திராக்க மாலையைக் கையிலேந்திக்கொண்டு வீட்டிலிருந்து செபிக்கின் ஒரு மடங்கு பலமும், பசுக் கோட்டத்தில் இருந்து செபிக்கின் நூறுமடங்கு பலமும், நந்தவனம் ஆரணியம் இடங்களில்இருந்து செபிக்கின் ஆயிர மடங்கு பலமும், மலையிலிருந்து செபிக்கின் பதினயிர மடங்கு பலமும், கடற்கரை நதிக்கரைகளிலிருந்து செபிக்கின் இலக்கமடங்கு பலமும், விநாயகர் சுப்பிரமணியர் சிவாலயங்களில் இருந்து செபிக்கின் கோடி மடங்கு பலமும், அந்தக் கடவுளின் திருமுன்னர் இருந்து செபிக்கின் அனந்த மடங்கு பலமுமுண்டாம்.

நா. கதிரைவேற்பிள்ளை
சைவ பூஷண சந்திரிகை.

எந்த உயிரையும் கொல்லாத சந்நியாசி ஒரு ஏரிக்கரை மேலே போனார். போகும் போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப் பார்த்து "ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்!" என்றார். "ஐயா, என் பறி நிரம்பினல் கரை ஏறுவேன்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழைக்கண்ணி அம்மன் அலங்காரத்துடன்



எழுந்தருளி விக்கிரகம் அலங்காரத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்கள்

சைவ சமயத்தவர்கள் சிவபெருமானின் திருவருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை அடையச் சிவபூசை வழிகாட்டியாக விளங்குகின்றது.

'' புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு''
'' கற்றுக் கொள்வன வாயுள; நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள; நீருள''

'' யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை ......... என்ற அருட்பெருந் திருவாக்குகள் சிவபூசைக்கு இன்றியமையாதன பத்திர புட்பங்கள் என்பதை எடுத்தோதுகின்றன.

சிவபூசைக்குரிய பத்திரபுட்பங்களைப் பெற்றுக்கொள்ளும் திருநந்தவனம் திருக்கோயிலின் ஒரு அங்கமாக விளங்குகின்றது.

திருநந்தவனம் அமைத்தல், பத்திரபுட்பம் எடுத்தல், திருமாலை கட்டுதல் முதலானவை சிறந்த சிவாலயத் தொண்டுகளாகும்.

திருக்கோயில் வீதியில் அல்லது அதற்குச் சமீபமாக சுத்தமும் பாதுகாப்பும் உள்ள ஓரிடத்தைத் தெரிவு செய்து, அங்கு நந்த வனம் அமைத்துக் கொள்ளல் நல்லது.

அந்த திருநந்தவனத்தில் ''புட்பவிதி'' என்ற நூலில் சொல்லப் பெற்ற, கடவுளுக்குகந்த கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ முதலான பூவகைகளைத் தருகின்ற தாவரங்களை உண்டாக்கி எருவிட்டு நீர்ப்பாய்ச்சி, களைபிடுங்கி வளர்த்து வருவதோடு, புறச்சமயிகள் ஆசாரம் அற்றோர் உட்புகாமலும், ஆடு மாடுகள் சேதம் செய்யா மலும், வேலி அமைத்து அரண் செய்து, எச்சில் உமிழ்தல், மூக்கு நீர் சிந்துதல், மல சலம் கழித்தல், முதலான அசுத்தங்களைச் செய் யாமலும், இங்குள்ள பத்திர புட்பங்களை கடவுட் பூசை முதலிய வற்றிற்கன்றி பிறவற்றிற்கு உபயோகப்படுத்தாமலும், மோவா மலும் பாதுகாத்தல் வேண்டும்.

பூக்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, என நால் வகையினவாம்.

1 கோட்டுப்பூவகை: கோட்டுப் பூ = மரக்கிளைகளில் பூக்கின்ற பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு,
மந்தாரை, ஊமத்தை, மாவிலிங்கை, நொச்சி,
பன்னும் அகில, சந்து, மகிழ், மாதுளை, மா, அசோகு,
பாதிரி வெள்ளெருக், கிலந்தை, பலாசு, நுணா, நறவம்
புன்னை, விளா, மருது, கொன்றை, நெல்லி, குராச், செருந்தி,
பொன்னின் ஆவிரை, கிளுவை குருந்து, வில்வம், நாவல்
மன்னு தாதகி, குளஞ்சி, அலரி, வெட்சி, பவழமல்லிகை,
சண்பகம், ஞாழல் கோட்டுப் பூவகையே.

குறிப்பு:- இலிங்கை - நாகலிங்கம், சந்து - சந்தனமரம் மகிழ் - மகிழமரம், மா - மாமரம், பலாசு - முருக்கு, நறவம் - குங்குமம், பொன்னின் ஆவிரை - பொன்போலப் பூக்கின்ற ஆவிரை. தாதகி - ஆத்தி குளஞ்சி - கிச்சிலி, ஞாழல் - புலிநகக் கொன்றை, இவையெல்லாம் இப்பூக்களையே குறித்தன.

வன்னி முதல் ஞாழல் முடிய உள்ள நாற்பது பூக்களும் கோட்டுப்பூ என்னும் வகையின என்பதாம்.

2. கொடிப்பூவகை: கொடிப் பூ = கொடிகளில் பூக்கின்ற பூ.

" மருவாருங் காந்தள். காட்டுமல்லிகை முல்லை, மௌவல், கருவார் வெற்றிலையே. தாளி கருமுகை. கருங்காக் கொன்றை, முருகாரும் வெண்காக் கொன்றை, குருக்கத்தி, முதலாவுள்ள இருவாட்சி: கொகுடி பிச்சி, இவையெலாம் கொடிப்பூ வாமே"

குறிப்பு: மரு ஆரும் - மணம் நிறைந்த. மௌவல் - மல்லிகை. கரு ஆர் - கருமை நிறம் பொருந்திய. தாளி - கூராளி (இதைச் செடியாகவும் கூறுவர்.) கருமுகை - கரிய அரும்பினை யுடைய. காக் கொன்றை - இது காக்கணம் எனப்படும். முருகு ஆரும் - தேன் பொருந்திய கொகுடி - முல்லையில் ஒரு வகை.

காந்தள்' முதல் 'பிச்சி' முடிய உள்ள பன்னிரண்டும் 'கொடிப் பூ' என்னும் வகையின.

3 நீர்ப்பூ வகை :

" செய்ய தாமரை, சேர்ந்தபொற் றாமரை
துய்ய தாமரை, சொல்லிரண் டுற்பலம்
ஐய செம்மைய வெண்மய வாகிய
நெய்தல் மற்றிவை நீரின் மலர்களே."

குறிப்பு:- செய்ய தாமரை - செந்தாமரை; பொற்றாமரை - பொன்னிறத் தாமரை; துய்ய தாமரை - வெண்டாமரை; இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பலம் - கருங்குவளை, செங்குவளை: செம்மைய நெய்தல் - செவ்வாம்பல்; வெண்மைய நெய்தல் - வெள்ளாம்பல்:

செந்தாமரை முதல் வெள்ளாம்பல் முடிய உள்ள ஏழும் 'நீர்ப் பூ' என்னும் வகையின.

4 நிலப் பூவகை :-

"பட்டிநா யுருவி, பூளை. பச்சை, செவ் வந்தி, தும்பை
வெட்டிவேர், மருக் கொழுந்து, கரந்தையே விண்டுகாந்தி
மட்டவிழ் துழாய், செங்கீரை, மத்தை. செம்பரத்தை வங்கம்
இட்டகொக் கிற: கனிச்சம், வலம்புரி இவைநி லப்பூ"

குறிப்பு;- பட்டி - பட்டிப் பூ; பச்சை - 'பச்சிலை' எனும் மரம்; செவ்வந்தி. - 'சாமந்தி' என வழங்குகின்றது; கரந்தை - சிவகாந்தை; விண்டு காந்தி - விஷ்ணு 'காந்தி; துளாய் - துளசி; செங்கீரை - திருநீற்றுப் பச்சை; மத்தை - ஊமத்தை; வங்கம்-கத்தரி, கொக்கிறகு - கொக்கு மந்தாரை; வலம்புரி - நந்தியாவர்த்தம்

'பட்டி' முதல் 'வலம்புரி' முடிய உள்ள பதினெட்டும் நிலப்பூ என்னும் வகையின. 'நிலப்பூ' 'புதற்பூ' என்றும் சொல்லப்படும். இவை கொடியில் பூப்பன.

பத்திரபுஷ்பம் எடுத்தல்:

சிவபூசை பெற்றவராயும். ஆசார அனுட்டான நியமம் பூண்டவராயும் உள்ளவர்களே சுவாமிக்குப் பத்திர புஷ்பம் எடுத்தற்கு அருகராவர்.

உதயத்திற்கு முன் எழுந்து ஸ்நானம் செய்து, சுத்த வஸ்திரம் தரித்துக் கொண்டு அனுஷ்டானம் முதலிய நியமங்களை நிறைவேற்றிய பின் பூக் கூடையைக் கையில் எடுத்து. ஒரு தண்டு நுனியில் மாட்டி உயரப் பிடித்துக் கொண்டாயினும், அரைக்கு மேலே கையிலே பிடித்துக் கொண்டாயினும் திருநந்தவனத்திற்குச் சென்று சிவசிந்தையுடன் அல்லது தோத்திரங்களைப் பாடிய வண்ணம் பத்திர புட்பங்களை எடுக்க வேண்டும். எடுத்த பின் கூடையைப் பத்திரத்தால் மூடிக் கொண்டு, ஆலயத்திற்குச் சென்று கால்களைக் கழுவிய பின் உள்ளே சென்று திருப்பூங்கூடையை அங்கு தூக்கிவிட வேண்டும் அல்லது அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பூ பத்திரம் எடுக்கும் போது, வீண் வார்த்தை பேசாமலும்' கொம்புகள் கிளைகளை முறிக்காமலும், கைகளினால் உடம்பையேனும் வஸ்திரத்தையேனும் தீண்டாமலும், கைகளை அரையின் கீழே தொங்க விடாமலும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபூசைக்கு ஆகாத பூக்கள்:**

மோந்த பூவும், புழுக்கடி, எச்சம், சிலந்தி நூல், மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், காற்றில் அடிபட்ட பூவும், எடுத்து வைத்துலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம் பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், இரவில் எடுத்த பூவும், கை, துணி, எருக்கிலை, ஆமணக்கிலை என்பவற்றிலே கொண்டு வந்த பூவும், ஆசௌசத்துடன் இருந்தும் குளியாதிருந்தும் எடுத்த பூக்கள், சிவபூசைக்கு ஆகாத பூக்களாகும்.

**திருமாலை கட்டுதல்:**

திருமாலை கட்டும் இடத்தைத் தண்ணீரால் சுத்தம் செய்து திருப்பூங்கூடையில் உள்ள பத்திரங்களில் புஷ்பங்களை வைத்துக் கொண்டு மௌனமாக இருந்து, பழுதுள்ளவைகளை நீக்கிவிட்டு, இண்டை; (தலைமாலை) தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலான திருமாலைகளைக் கட்டவேண்டும்.

**விநாயக சதுர்த்திக்குரிய பத்திர புட்பம்:**

மாசிப்பச்சை, கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, வன்னி ஆகிய பத்திரங்களும், கத்தரி, அலரி, ஆத்தி, எருக்கு, மருது, விஷ்ணு காந்தி, மாதுளை, தேவதாரு, மருநெல்லி, சிறு சண்பகம், கூதாளி, பாதிரி என்னும் பூக்களும், அறுகம் புல்லும் விநாயக சதுர்த்திக்குச் சிறந்த பத்திர புட்பங்களாகும்.

**இன்னமலர் இன்ன தேவர்க்காமெனல்:**

வில்வ இலையும், கொன்றைப் பூவும், சிவபெருமானுக்கும்; அறுகம்புல் விநாயகருக்கும்; வெட்சிப் பூவும், கடப்பம் பூவும் முருகனுக்கும்; துளசி திருமாலுக்கும்; நீலோற்பலப்பூ உமையம்மைக்கும்; தாமரைப்பூ சூரியனுக்கும்; ஆம்பற்பூ இலக்குமிக்கும்; வெண்டாமரைப்பூ கலைமகளுக்கும்; மிக்க விருப்பத்தைத் தருவன.

**இன்னமலர் இன்ன பாவத்தை நீக்கும்:**

எட்பூ - பிரமகத்தி தோஷத்தை நீக்கும்; வில்வம் - பொய் சொன்ன பாவத்தைக் கழிக்கும்; கோங்கம் பூ - கள்ளுண்ட பாவத்தை அகற்றும்; துளசி வறுமையைப் போக்கி நினைத்தவற்றைக் கொடுக்கும். துளசி மலர்களினுள் உயர்ந்தது.

விநாயகருக்குந் துளசி ஆகாது.

– புட்பவிதி நூலில் இருந்து சில பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாக தம்பிரான்



சண்டேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமயிக்கு உரிய முக்கிய இலக்கணங்கள்:-

1) கொலை, களவு, கள்ளுண்ணல், மச்சம், மாமிசம் புசித்தல், வியாபிசாரம், பொய் முதலிய பாவங்களை மரண பரியந்தம் விலக்கி நடப்பது.

2) உயிர்களுக்கு இரக்கம் வைத்துப் பேசுதல், வறியவர்களுக்கு ஒரு பிடி அன்னமாவது கொடுத்தல், செய்நன்றியறிதல், இந்த தருமங்களை மரண பரியந்தம் பாதுகாத்து நடப்பது.

3) பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமயன், மாமன், உபாத்தியாயர் மரணபரியந்தம் உபசரிப்பது.

4) சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது.

5) விபூதி, உருத்திராக்ஷந் தரிப்பது.

6) சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்ஷர செபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரண பரியந்தம் நித்தமும் பத்து நிமிட நேரத்திலாவது, மனதை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

7) நித்தமுமாவது, புண்ணியகாலங்களிலாவது, சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

8) சைவவினாவிடை, சிதம்பரமான்மிய வசனம், பெரியபுராண வசனம், முதலிய புத்தகங்களை வாசித்தாவது, கேட்டாவது அறிவது.

9) சிவபெருமானுடைய மகிமையையும், புண்ணிய பாவங்களையும், சிவபெருமானை வழிபடும் முறையையும் அறிவிக்கிற சைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

10) சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குருநிந்தை இவைகளைக் கேளாது விடுதல்.

11) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சமயகுரவர்கள் நால்வருடைய திருநட்சத்திரங்களிலே அவர்களுடைய சரித்திரத்தைக் கேட்டு, சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து விரதமிருப்பது.

12) செய்யாத பாவங்களைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியங்களை செய்யாது விட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி குருவையடுத்து சிவாகமப்பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது.

—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்.



249700
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலய தரிசனம்

ஸ்நானஞ் செய்து கொண்டு தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துக் கொண்டு கோயிலுக்குப் போதல் வேண்டும். கோயிலுக்குக் கிட்டப் போனவுடனே கால்களைக் கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக் கொண்டு திருநந்தி தேவரை வணங்கி 'பகவானே' அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி தந்தருளும்' என்று வேண்டிக் கொண்டு உள்ளே போதல் வேண்டும். பின்பு பலி பீடத்தையும் நந்திதேவரையும் கும்பிட வேண்டும். அதன் பின் பிள்ளையாரையும், சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும், நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர். சந்திரசேகரர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமய குரவரையும் தரிசனம் செய்தல் வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனஞ் செய்யும் பொழுது முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். கும்பிடும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்றல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரத்திற்குக் குறையாமற் செய்தல் வேண்டும். தலை, கைகள், செவிகள், புயங்கள் மோவாய் என்னும் எட்டு அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கைகள், முழந்தாள்கள், என்னும் ஐந்து அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். பின்பு எழுந்து இரண்டு கைகளையுங் குவித்துத் தியானஞ் செய்து கொண்டு மெல்ல மெல்லக் கோயிலை வலமாகச் சுற்றி வந்து பின்பும் சந்நிதானத்திலே நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்.

* 'பிரதக்ஷிணஞ் செய்த பின்பு, சண்டேஸ்வரர் சந்நிதியையடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து வணங்கல் வேண்டும். பின்பு சுவாமி சந்நிதானத்தில் வந்து மீண்டும் நமஸ்கரித்து விட்டு வீட்டுக்குப் போதல் வேண்டும். ஒவ்வொரு நாளுங் கோயிலுக்குப் போவது உத்தமம். ஒவ்வொரு நாளும் போக இயலாதவர் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம்,

---

* 'பிரதக்ஷிணம் வலமாகச் சுற்றிக் கும்பிடுதல்; சரீரம் முழுவதும் நிலத்திலே பொருந்தச் சுற்றுதல் அங்கப்பிரதக்ஷணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப் பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி, சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி முதலிய புண்ணிய காலங்களாயினும் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.

கோயிலுக்குப் போனால் வேடிக்கைகளை விரும்பாமற் சிவ வழிபாட்டிலேயே மனத்தைச் செலுத்துதல் வேண்டும். கோயிலுக்குப் போகிறவர்கள் இயன்ற அளவு தொண்டு செய்வது உத்தமம். குடை பிடித்தல், தீவர்த்தி பிடித்தல், வாகனங் காவுதல், பூந் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றுவது செய்தல் வேண்டும்.

திரு. சு. சிவபாதசுந்தரம் B. A.
சைவபோதம் முதற்புத்தகம்

ஒரு செல்வன் தன் பிதாவுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துக்கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதைப்பார்த்து. அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப்போட்டான். பின் அந்தச் செல்வன் தன் பிதாவைப் பார்த்து, "ஓடு எங்கே?" என்று கேட்டு அடித்தான், அப்பொழுது அந்தப் பிள்ளை, "அப்பா என் பாட்டனை அடியாதே. நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்து வைத்தேன்; ஏன் என்றால் நான் பெரியவன் ஆன பின் உனக்கு வேறு ஓடு சம்பாதிக்க மாட்டேன்." என்றான். அதைக் கேட்டு, செல்வன் வெட்கப்பட்டு, அன்று முதல் தன் பிதாவை மிகுந்த சௌக்கியமாக வைத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்கள்

1) ஸ்நானம் செய்யாது போதல்.
2) தோய்த்துலராத வேட்டி தரித்துக் கொண்டு போதல்.
3) கால் கழுவாது போதல்.
4) ஆசௌசத்துடன் போதல்.
5) ஆசாரம் இல்லாது போதல்.
6) தலையில் வஸ்திரம் தரித்துக் கொண்டு போதல்.
7) சட்டையிட்டுக் கொள்ளுதல்.
8) போர்த்துக் கொள்ளுதல்.
9) சண்டேஸ்வரரைச் சுற்றி வலம் வருதல்.
10) பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்.
11) குடை பிடித்துக் கொள்ளுதல்.
12) வெற்றிலை பாக்கு உண்டல்.
13) மலசலம் கழித்தல்.
14) மூக்கு நீர் சிந்துதல்.
15) மூக்குத்தூள் போடுதல்.
16) துப்புதல்
17) மயிர்கோதி முடிதல்.
18) ஆசனத்திலிருத்தல்.
19) சயனித்திருத்தல்.
20) காலை நீட்டிக்கொண்டு இருத்தல்.
21) விக்கிரகத்தைத் தொடுதல்.
22) சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கே போதல்.
23) சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் இடையிலே நமஸ்காரம் [செய்தல்
24) சுவாமிக்கு நேராகக் காலை நீட்டி வணங்குதல்.
25) சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம், பிரதக்ஷணம் [செய்தல்.
26) தூபி, கொடித்தம்பம், பலிபீடம், விக்கிரகம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல்.
27) விபூதி, சந்தனம் முதலியவற்றை கோயிற்தூண்களில் பூசுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) சிவபெருமானை முற்பக்கத்தும், பிற்பக்கத்தும் நின்று வணங்
29) திருவிளக்கு அவியக் கண்டுந் தூண்டாதொழிதல். [குதல்
30) ஓடி வலம் வருதல்.
31) நிருமாலியத்தைக் கடத்தல்.
32) நிருமாலியத்தை மிதித்தல்.
33) சிரித்தல்.
34) வீண்வார்த்தை பேசுதல்.
35) சண்டையிடுதல்.
36) சூதாடுதல்
37) போசனபானம் பண்ணுதல்.
38) விளையாடுதல்,
39) வாகனத்திலிருத்தல்.

இக்குற்றங்களைச் செய்பவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள். என்று ஆகமங்களும், புராணங்களும் கூறுகின்றன.

''குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது'' போல சுவாமி தரிசனமாகிய புண்ணியத்தைச் செய்யப்போய் பாவத்தைத் தேடிக் கொள்வது புத்தியன்று. எல்லோரும் இக் குற்றங்களை விட்டு விதிப்படி சுவாமி தரிசனம் செய்து திருவருளைப் பெற்று உய்யக் கடவர்கள்.

卐

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்றொருவனை நோக்கி, ''சிநேகிதனே, நீ கடவுள் இருக்கின்ற இடத்தைச் சொல்வாயாகில் உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்.'' என்றான். அதற்கு அவன், ''தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்.'' என்றான். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர்

# ஆலய வரலாறு

தர்மத்துவீபமாம் இலங்கை மணித்தீவின் சிரம் எனப் பொலிவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்துக்குக் கண்ணாக அமைந்து புகழ் சேர்த்தது வண்ணையம்பதி. வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் முதலாய பல புண்ணிய திருத்தலங்களையும், நாவலர் வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி போன்ற பல கலைபயில் ஸ்தாபனங்களையும், சைவபரிபாலன சபை போன்ற சமயப் பணி புரியும் நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கற்றறிந்த கல்விமான்களையும், சைவ ஆசாரம் மிக்க புண்ணிய சீலர்களையும், தருமநெறி தவறாக நீதிமான்களையும், ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரையும் தோற்றுவித்த புகழ் உடையது. வண்ணார் பண்ணையின் வடகிழக்கில் அமைந்தது நீர்வாவிப் பதி.

நீராவியடி, நீராவி என வழங்கப்படும் பகுதி புண்ணியம் செய்த பூமி. இப் புண்ணியப் பகுதியில் வாழ்பவர்கட்குத் தினமும் காலை நாலு மணி முதல் இரவு எட்டு மணிவரை புனித ஆலயங்களின் 'ஓம்' எனும் ( பிரணவ மந்திர ) மணி ஓசை, அவர்களது ஆன்ம ஈடேற்றத்திற்கு அடிப்படையான இறை உணர்வை வளர்த்துக் கொண்டே இருக்கும். நல்லூர் முருகன் மணி ஓசையுடன் ஆரம்பமாகி, கலட்டி அம்மன், நாச்சிமார் கோயில், விசுவேசப் பிள்ளையார், காட்டுத்துறைப்பிள்ளையார், பன்றிக்கோட்டுப் பிள்ளையார், சாந்தையர் மடம் பிள்ளையார், வைத்தீஸ்வரப் பெருமான், காளிகோயில், ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள், அரசடிப் பிள்ளையார், கயிலாயபிள்ளையார், நடேசர் கோயில், கடையிற்சுவாமி கோயில், நீராவிப்பிள்ளையார் ஆகிய பல பல கோயில்களின் மணி ஓசைகளால் புனிதம் அடையும் பாக்கியம் பெற்றது நீர்வாவிப் பதி.

முன்னாளில் பூதர் என்பவர் இந்தியாவில் உள்ள காரைக்காலில் இருந்து திருமறைக்காடு என்று போற்றப்படும் வேதாரண்யம் வழியாக இலங்கைக்கு வந்து நீர்வாவிப் பகுதியில் குடியேறினர். அப்பொழுது இந்த இடம் காடாகவும், வயலாகவும் இருந்தது. இவருக்கு அச்சூழலில் வசித்தவர்களுடன் தொடர்பு இருந்தது. பூதர் இங்கு வரும்போது திருமறைக் காட்டில் உறையும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானையும் தம்முடன் கொணர்ந்து ஓர் சிறிய கொட்டிலில் ஸ்தாபித்து வழிபாடு செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம இராவண யுத்தத்தில் இராவணனைக் கொன்ற பிரம ஹத்தி தோஷம் இராமபிரானைப் பீடித்து இருந்தது. வேதாரண்யம் ஆலயத்தில் உள்ள விநாயகரை வணங்கி அத்தோஷம் நீங்கப் பெற்றார் என்பது வரலாறு. அத்துணை வரலாற்றுச் சிறப்புப் பெற்ற விநாயகரே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர்.

" யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கிறையில் " பருத்திப் புலம் " என்னும் காணியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பவர் ஸ்ரீ ஜய நீராவி வீரகத்திப் பிள்ளையார். "

" ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் திறைசேரிச் சபைத் தலைவராக இருந்தவரும், வண்ணார்பண்ணை கிழக்கில் வசித்தவருமாகிய பூலோக முதலியார், தமது குடும்பத்தினதும், சந்ததியினதும் ஆன்ம ஈடேற்றம் கருதி தங்கள் குல தெய்வமான வீரகத்தி விநாயகரை வேதாரண்யத்தில் இருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தார் "

அக் காலத்திலேயே அவர் அதே எண்ணத்துடன் தமது குலகுருவாக விளங்கிய வேதாரண்யம் சைவக் குருக்கள்மாரை நீராவிப் பதிக்கு வரவழைத்து அவர்கள் வசதியாகத் தங்கி இருந்து சமய தீட்சைகள் செய்வதற்கும், அபரக் கிரியை, அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கும் மற்றும் சைவசமயப் பணிகள் புரிவதற்கும் 'நீராவி குருக்கள் மடம்" அமைத்து அக்காணியை அவர்கட்கு இனுமாகக் கையளித்தார்கள்

அதே போல் பரம்பரை பரம்பரையாக இக் குடும்பத்தினருக்கு வைத்தியம் செய்வதற்கு வைத்தியர் ( பரியாரி ) ஒருவர் தங்கி இருக்கவும் காணி கொடுக்கப்பட்டதாவும் தெரிகின்றது. (பரியாரி வளவு )

பூலோக முதலியார் காலத்தில் ஐயன் என்பவரை இந்தியாவில் இருந்து இங்கு அழைப்பித்து குளம் வெட்டி, கேணி உண்டாக்கி, அம் மண்ணால் வயலை நிரப்பி வளவு ஆக்கினர் என்பது கர்ணபரம்பரைக் கதை. இதன் பின்னர் தான் நீராவி என்ற பெயர் வழங்கலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதருக்கு இரண்டு ஆண் மகவுகள். மூத்தவர் பூலோகமுதலியார் இளையவர் முத்து முதலியார். பூலோகமுதலியாருக்கு ஒரு மகன் இரகுநாதமுதலியார். இரகுநாதமுதலியார் மகன் சிவகுருநாதமுதலியார் சிவகுருநாத முதலியார் மகன் இரகுநாத முதலியார். இவரே இரகுநாதச் சிறுப்பர். அந் நாளில் தற்பொழுது பிறவுண் வீதி என அழைக்கப்படும் வீதி சிறுப்பர் வீதி என அழைக்கப்பட்டது. அது இவர்கட்கு அளிக்கப்பட்ட கௌரவம் ஆகும்.

நீராவி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர் ஆலயம் பூலோக முதலியாரின் பின் அவர் பௌத்திரன் சிவகுருநாத முதலியாராலும், பின்னர் அவர் மகன் இரகுநாதச் சிறுப்பர் அவர்களாலும் அதன் பின் அவரது மகன் சம்பந்தநாத முதலியாராலும் பரிபாலிக்கப்பட்டது.

அக்காலத்தில் இவர்கள் பல்லக்கில்தான் பிரயாணம் செய்வார்கள். இப்பரம்பரையினர் உபயோகித்த பல்லக்கின் பகுதிகள் இன்றும் உண்டு.

பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்ப முதலே ( 1805 ) இவ் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இவ் ஆலயம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய புகழ்பெற்ற பெரிய ஆலயங்களுள் ஒன்ருக விளங்கியது. இங்கு மூன்று காலப் பூசைகள் அன்று முதல் இன்றுவரை கிரமமாக நடைபெற்று வருகின்றன. அக்காலத்தில் வருடத்தில் மூன்று நாட்கள் விசேட அலங்கார உற்சவங்கள் இடம் பெற்றன. அவை: ஆனி மாதத்தில் ஒரு நாள் ( மணவாளக் கோலமாக இருக்கலாம்). ஆவணி மாதத்தில் ஒரு நாள் ( ஆவணி - விநாயக சதுர்த்தி ) புரட்டாதி மாதத்தில் ஒரு நாள் ( விஜயதசமி - மானம்பு ) இவ் உற்சவங்கள் ஊர்வலமாக நடைபெற்றன. (ஆதாரம் - யாழ்ப்பாணம் செயலகத்தில் உள்ள பதிவு ஏடு).

பூதர் என்பவரால் சிறு கொட்டிலில் ஸ்தாபிக்கப்பட்ட வீரகத்தி விநாயகர் அவர் மகன் பூலோக முதலியார் காலத்தில், கல்லாலும் களி மண்ணுலும் கட்டப்பட்டு ஓலையால் வேய்ந்த கருவறையில் குடி கொண்டு அருள்பாலித்து வந்தார். இரகுநாதச் சிறுப்பர் காலத்தில் இவ் ஆலயம் சுண்ணும்பினுல் கட்டப்பட்டு அளவில் பெரிதாக்கப்பட்டது தினசரி சந்தியாவந்தனம் (அனுட்டானம்) செய்த பின்பே உணவு உட்கொள்ளும் வழக்கம் உடையவர் இரகுநாதச் சிறுப்பர். ஒருநாட் காலை இவர் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருக்கும் போது சிலர் வந்து கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டகை தீப்பிடித்து எரிவதாகத் தெரிவித்தனர். அவர் தமது அனுட்டானத்தை முடித்துக் கொண்டு, நேரே ஆலயம் சென்று ஆலய புனருத்தாரணம் செய்யத் தேவையான ஆட்களை உடன் வரவழைத்து, சுண்ணும்பினுல் கட்டுவதற்குரிய ஒழுங்குகள் செய்து அத்திவாரம் போட்ட பின்னரே வீடு வந்து உணவு அருந்தினுர் என்பது வரலாறு.

பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணம் கச்சேரியில் சிருப்பர்ர் உயர் பதவி வகித்தவர் இரகுநாத முதலியார். இவர் மிகுந்த செல்வர்க்கு உடையவர். இவர் தமது குலகுருவாக இருந்த வேதாரண்யம் சைவக் குருக்கள்மாரை மீண்டும் நீராவியடிக்கு வரவழைத்து, அவர்கள் வசதியாகத் தங்கி இருந்து குருத்துவம் பார்க்க உதவினுர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக் குருமாரைக் கண்டனம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், இவ் வேதாரண்யம் சைவக் குருக்களையும் கண்டிக்க முயல அப்பொழுது சிருப்பர் அவர்கள் இவர்கள் தனது குருக்கள்மார் என்பதைத் தெரிவித்த பொழுது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இவருக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் பற்றி பின்னர் எதுவும் முயற்சிக்கவில்லை.

1851ம் ஆண்டு ஆவணி மாதம் 7ம் தேதி ஒரு மகாசபை [பூலோக முதலியார் வீட்டிலே] கூடி, நிர்ணயங்கள் நடாத்தி, இலங்கைச் சட்ட நிருபண சபையிலே தமிழ்ப் பிரதிநிதியாக அம்பலவாண முதலியார் மயில்வாகனம் அவர்களை நியமிக்கும் பொருட்டு கிவர்னருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியது. (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு) இது இரகுநர்தச் சிருப்பர் காலத்திலாகும்.

இவர் காலத்தில் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய ஆசான் — இருபாலை சேனுதிராச முதலியார் நீராவிப் பிள்ளையார் மேல் கலி வெண்பா பாடினுர்.

இரகுநாதச் சிருப்பருடைய மகன் சம்பந்தநாத முதலியார் இரகுநாதச் சிருப்பர் வேதாரணியம் சென்றிருந்த போது வேதாரணியேஸ்வரரது குஞ்சிதபாத நீழலை அடைந்தார். அவரது பிரிவு சம்பந்தநாத முதலியாரை வெகுவாகத் தாக்கியதால் அவர் மூளை சுகமில்லாது இள வயதிலே அகால மரணம் அடைந்தார். சம்பந்தநாத முதலியாரிடம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தாம் ஸ்தாபித்த ஸ்ரீ நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாக வைத்துப் பெரும் பொருள் கடனுகப் பெற்று இருந்தார். பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நடராசப் பெருமான் திருவடிநீழலை அடைந்ததும் கடனை வசூலிக்க, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய பல பல பிரசுரங்கள் வீடு கொண்டுவரப்பட்டன.

சம்பந்தநாத முதலியாருக்கு மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறந்தனர். புத்திரர்கள் முறையே சிவகுருநாதர், இரகுநாதர் இராமநாதர், புத்திரி சிவகாமிப்பிள்ளை. இவர்கள் அனைவரும் தகப்பனுர் இறக்கும் போது மைனர்கள் (பராயம் அடையாதவர்கள்). எனவே சிவகாமிப்பிள்ளை தனது ஒன்பதாவது வயதிலே தன்து முறை மாப்பிள்ளை தில்லையம்பலம் அவர்கட்கு வாழ்க்கைத் துணையானுர். இவரே இக் குடும்பத்தின் பொறுப்புகளை ஏற்று கோயிலையும் பராமரித்தார்.

சிவகுருநாதர் காலத்திலே சுண்ணும்பினுல் கட்டப்பட்ட நீராவிப் பிள்ளையாரின் கர்ப்பக்கிரக மண்டபம், அர்த்த மண்டபம் என்பன இடிக்கப்பட்டு வைரக்கல்லால் கட்டப்பட்டன. கர்ப்பக் கிரகம் அதன் ஸ்தூபி, அர்த்தமண்டபம், சண்டேஸ்வரர் ஆலயம் என்பன வைரக்கற்களால் கட்டப்படும் பொழுது சிவகுருநாதர் சிவபதமடையவே, அவரது மைத்துனர் தில்லையம்பலம் அவர்கள் ஆலயத்திருப்பணி, புனருத்தாருண வேலைகளைப் பூர்த்தி செய்யவே தில்லையம்பலம் அவர்களின் தகப்பனுர் அருணுசலம் தெற்பை போட்டு கும்பாபிஷேகம்செய்வித்தார்கள்.

பின்னர் கனிஷ்ட புத்திரன் இராமநாதர் ஆலயப் பொறுப்பை ஏற்றுர். இவர் ஆசாரம் மிகுந்தவர். விநாயகப் பெருமானுடைய பூசைக் கிரமங்களில் குறைகள் நிகழாதபடி பார்த்து வந்தார்.

இவருக்குப் பின் இவரது புத்திரன் சம்பந்தநாதர் ஆலயப் பொறுப்பை ஏற்று, வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டபடி பூசைகள், உற்சவங்கள் என்பவற்றைக் குறைவின்றி நடாத்தி வந்தார்.

இரகுநாதருடைய ஏகபுத்திரி செல்லம்மா வைத்திலிங்கம் ஆலய நிர்வாகப்பொறுப்பை 1975ம் ஆண்டளவில் ஏற்றுர்கள். 'செல்லம்' என எல்லோராலும் செல்லமாக அழைக்கபபட்ட செல்லம்மா அவர்களுடைய முக்கிய குறிக்கோள் தம் குலதெய்வமான வீரகத்தி விநாயகருக்கு, அழகிய ஐந்து மாடக்கோபுரம் திராவிடக்கலை அம்சங்களுடன் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் அழகான வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டு ஆலயம் அழகாகப் புனிதமாக விளங்க வேண்டும். இக்குறிக்கோள் நிறைவேறத் தனது பொறுப்பில் இருந்த காணியைக் கோயில் பெயரில் எழுதிப் பின்னர் நீதிமன்ற அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று, அக்காணியின் ஒருபகுதியைப் பகிரங்க ஏலத்தில் விற்று இத் திருப்பணி வேலைகளை 1981ம் ஆண்டு ஆரம்பித்தார்கள்.

நீராவி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகருக்கு அழகிய ஐந்து மாடக் கோபுரம் கம்பீரமாக எழுந்தது. இவ் இராஜகோபுரம் அழகாக சிறப்பாக, கலை அம்சங்களுடன் மிளிர்ந்து ஆலயத்தை அலங்கரிக்க வேண்டும் என்பதையும், ஏனைய ஆலய இராஜகோபுரங்களில் நின்றும் தனிச் சிறப்புடையதாக விளங்க வேண்டும் என்பதையும் விநாயகப் பெருமானே ஆலய உரிமையாளர்களுள் ஒருவராகிய வைத்திய கலாநிதி யோகநாதன் அவர்கட்கு உணர்த்தி இராஜகோபுர வேலைகளை அவர்மூலம் நிறைவேற்றினர்.

செல்லம்மா அவர்கள் ஆரம்பித்து வைத்த திருப்பணியை அவர்களது ஏக புத்திரன் இரகுநாதமுதலியார் பொறுப்பேற்றார்: சூழ்நிலை சரியாக இல்லாத காரணத்தால் செல்லம்மா அவர்கள் காலத்தில் அவர்களது எண்ணங்கள் நிறைவேறவில்லை: ஆனல் இராஜகோபுரம் வளர்ந்து வருகின்றது என்ற நிம்மதியுடன் 1984ம் ஆண்டு மகா சிவராத்திரிப் புனித நன்னாளின் மாலைப் பொழுதில் விநாயகப் பெருமான் சிந்தனையுடன் ( சிவனடி ) நடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாத நீழலை அடைந்தார்கள்.

இரகுநாத முதலியார் ஆலயப் பொறுப்பை ஏற்றதும் ஆலய ஏனைய உரிமையளர்களான திருவாளர்கள் இராஜா அருளம்பலம் சேனாதிராசா, அருளம்பலம் சேனாதிராசா, வேலுப்பிள்ளை யோகநாதன் என்போர் அவருக்கு மிக்க உதவியாக இருந்தார்கள்.

இரகுநாதமுதலியார் வேலை நிமிர்த்தம் நைஜீரியா செல்ல நேரிட்டது. அப்பொழுது கோயில் உரிமையாளர்களுள் ஒருவரான இராஜா அருளம்பலம் சேனாதிராசா அவர்கள் அற்றோணித் தத்துவம் பெற்றுக் கோயிலைப் பராமரித்தார்கள்.

இரகுநாதமுதலியாரும் அவர் வாழ்க்கைத்துணை சாந்தாதேவியும் தங்கள் அயராத முயற்சியால் விநாயகனை விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதன் என்று அவரைச் சிக்கெனப் பிடித்ததால் மிகக் குறுகிய காலத்தில் அழகிய சொக்கட்டான் மண்டபமும் (மகாமண்டபம்); வேலைப்பாடுகளைக் கொண்ட திருவாசி மண்டபமும் (நிருத்த மண்டபம்) அவர்களால் கட்டி முடிக்கக்கூடியதாக இருந்தது: கண்ணப்பநாயனர் இறைவனுக்குப் படைப்பதற்கு இறைச்சியின் வெவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு பகுதிகளைச் சுவைத்துப் பார்த்துத் தெரிந்து எடுத்தாரோ அதே போல் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் உள்ள பல பல இராஜ கோபுரங்களையும், கோயில் மண்டபங்களையும், வேலைப்பாடுகளையும் தேடித் திரிந்து, பார்த்து; அவற்றுள் சிறந்தனவற்றை எல்லாம் மனதில் இருத்தி, தங்கள் கண்கண்ட தெய்வம் தீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகருக்கு அமைத்து அழகாக்கியுள்ளார்கள்.

1988ம் ஆண்டு விபவ வருடம் ஆவணிமாதம் 2ம் திகதி (7 - 9 - 88) புதன் கிழமை காலை 9 மணிக்குமேல் 10மணிக்குள் வருச்சிக லக்கின குரு ஹோரையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் பிரதிஷ்டா பிரதம குரு - சிவதாகம கிரியா சிரோன்மணி சிவஸ்ரீ மு ஜெயந்தி நாதக்குருக்கள் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

1989ம் ஆண்டு ஜுன் மாதம் 8ம் தேதி காலை முறையாக விநாயகப் பெருமானுக்கு, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது.

## ஆலயப் பரம்பரைப் பரிபாலகர்கள்

பூதர் (ஆரம்பம்) ஸ்தாபகர்

மகன்: பூலோக முதலியார்

பௌத்திரன்: சிவகுருநாத முதலியார்

புத்திரன் இரகுநாத முதலியார்

புத்திரன்: சம்பந்தநாத முதலியார்

சிவகுருநாதர் சிவகாமிப்பிள்ளை இரகுநாதர் இராமநாதர்

தில்லையம்பலம்

செல்லம்மா சம்பந்தநாதர்

+ வைத்திலிங்கம்

இரகுநாத முதலியார்

+ சாந்தாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பரிவார மூர்த்திகள்

நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலய மூல மூர்த்தி (கருங்கல் விக்கிரகம்) இந்தியாவில் உள்ள வேதாரண்யத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவர். இதற்குப் பொருத்தமான எழுந் தருளி விநாயகர் (உற்சவ மூர்த்தி) பஞ்சலோகத்தில் உள்ளது.

ஏனைய பரிவார தெய்வங்கள் மூஷிகம், பலிபீடம், வைரவர், வைரவர் சூலம், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் ஆகும். இவற் றுள் வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தி கட்குத் தனித்தனி ஆலயங்கள் அமைந்திருந்தன. தற்பொழுது நாகதம்பிரான் விக்கிரகம் வைரவர் ஆலயத்துள் இடம்பெற்று இருக்கின்றது.

## ஆலய மண்டபங்கள்

கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், நிருத்த மண்டபம் என்பன இங்குள்ள மண்டபங் களாகும். வசந்த மண்டபம் புதிதாகக் கட்டப்பெற்றுள்ளது. முன்பு வியாழ மட்டம் வரை செங்கல்லால் கோபுர வாயில் கட்டப் பட்டு இருந்தது. முன்பு பண்டிகை எதுவும் இன்றி சபையும் வைர வர் மண்டபமும் இருந்தது. சபையில் நவராத்திரி காலங்களில் அம்மனை கும்பத்தில் வைப்பது வழக்கம். உற்சவ மூர்த்தி அர்த்த மண்டபத்தில் இருப்பார்.

வாகனசாலை, பாகசாலை, (மடப்பள்ளி), களஞ்சியம், அறைகள் முன்பு இருந்தன. தற்பொழுது பாகசாலையும் களஞ்சியமும் புதிதாக்கப்பட்டுள்ளன. புதிதாக யாகசாலை அறை கட்டப்பட் டுள்ளது.

## ஆலய நூல்

நீராவி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர் பெருமை பற்றிப் புலவர் பெரு மக்கள் பலர் பாடியுள்ளனர். கலிவெண்பா, திருவூஞ்சல், விநாயகர் துதி என்பன சிறப்பானவை. சென்ற நூற்றுண்டில் புகழ் பெற்று விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருவாக விளங்கிய இருபாலை சேனுதிராச முதலியார் அவர்கள் நல்லூர்க் கந்தன் மீதும், நீராவி வீரகத்தி விநாயகர் மீதும் வெண்பாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார். விநாயகர் மீது பாடப் பெற்றது கலி வெண்பா ஆகும். இக் கலி வெண்பா மிகவும் கடினமான நடையில் இருந்தமையால், அதைக் கற்ரேரும் மற்ரேரும் புரிந்து கொள்ள அதற்கு விளக்கவுரை எழுத வேண்டி இருந்தது. இதற்குப் பொருத்தமானவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாணுக்கர் பரம்பரையில் முறையாகக் கல்வி பயின்று கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய வித்துவான் திரு. ந. சுப்பையாபிள்ளே அவர்களே எனத் தேர்ந்து அவர்களைக் கொண்டு திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் உரை எழுதுவித்து அச்சேற்றி, அதன் வெளியீட்டு விழாவையும் சிறப்பாக நடாத்தினுர்கள்.

['நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய கல்வளையந்தாதியிற் செய்யுட்கள் திரிபெதுகையைக் காட்டிலுஞ் சிறந்த தலையாகெதுகை எனப்படும் 'யமக எதுகை' பொருந்தியவையாகும். கல்வளையந்தாதியிற் காணப்படும் 'யமக எதுகை' போலல்லாமல் அதனிலும் விசேஷமாகப் (இரு சீர்களில் இரு சீர்க்கு மேலதிகமான சீர்ப் பகுதியில்) பொருந்திய 'யமக எதுகை' பெற்றுவர இயற்றியுள்ளார் இக்கலி வெண்பாவினைச் சேனுதிராய முதலியார். அதனுல் இக் கலிவெண்பாவிற்குப் பதச் சேதஞ் செய்து (-பதம் பிரித்து) பொருள் காண்டலும், பொருளுரைத்தலும் எல்லார்க்கும் சுலபமான காரியம் அன்று. எமக்கும் அப்படியே; இந் நூலாசிரியரை ஒத்த பெரும் புலமையாளர்க்கே இயல்பதாகும்']

"கலிவெண்பா" உரையாசிரியர் வித்துவான் சுப்பையாபிள்ளை.

## ஆலய சொத்துக்கள்

நீராவி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர் ஆலயம் பூலோக முதலியாரால் அவரது காணியில் ஸ்தாபிக்கப்பட்டமையால், சந்ததி சந்ததியாக இப்பரம்பரையில் வந்தவர்களே, இவ் ஆலயத்தை, வேத சிவாகம முறைப்படி, ஆசாரங்கள் வழுவா வண்ணம் பரிபாலித்து வருகின்ருர்கள்.

இவ் ஆலயத்துக்குரிய காணிகள் நிபந்தனைகளுக்கு அமைய பரிபாலிக்கப்படல் வேண்டும் என உள்ளது.

கோயிலின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நாலுபாப்புக் காணியில் கோயிலைப் பூசை செய்யும் அர்ச்சகர் வசித்து, இக் கோயிலின் நித்திய நைமித்திய காரியங்களை நடாத்தி வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைச்சேரி வெளியில் உள்ள சாதுமதித்தான் வயல் என்னும் நாற்பது பரப்புக் காணியில் நெல் விளைவித்து நித்திய நைமித்திய பூசைகட்கு உபயோகிக்க வேண்டும்.

## திருநந்தவனமும் புஷ்பங்களும்

ஆரம்ப காலத்தில் இருந்தே ஆலயத்தைப் பராமரித்து வந்தவர்கள் தங்கள் வீட்டில் ஓர் பரிசுத்தமான இடத்தில் பூங்கொல்லை அமைத்து, நல்லபாதுகாப்புச் செய்து, இறைவனுக்குப் பிரியமான மலர்களான, பன்னீர்ப்பூ, திருவாத்தி, பவள மல்லிகை, மல்லிகை முல்லை, கொக்குமந்தாரை, நந்தியாவெட்டை, மயிர்க்கொன்றை வில்வம் போன்ற மரங்களை வளர்த்தனர். கோயில் அர்ச்சகர் தினமும் காலையில் அங்கு வந்து, பரிசுத்தமாக, கால்கழுவிய பின் உட்சென்று, பூக்களைக் கொய்து பூக்குடலையில் இட்டு, தூய்மையாக எடுத்துக் கொண்டு, கோயில் திறப்பையும் பெற்றுக் கொண்டு போய் விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்வர். இன்றும் அப் பூங்கொல்லைப் பூக்கள் விநாயகப் பெருமானை அலங்கரிக்கின்றன.

## நீராவிக்கேணி

பூலோக முதலியார் காலத்தில் அவரால் ஐயன் என்பவரைக் கொண்டு அமைக்கப் பெற்ற நீராவித் திருக்குளம் (நீராவிக்கேணி) யாழ்ப்பாணத்தில் உள்ள எந்த ஆலயத்துக்குமே இல்லாத சிறப்புடையதாக விளங்குகின்றது. கோயிலுக்குப் பின்புறமாகவும் இவ்வளவு பெரிய அளவிலும் அமைக்கப் பெற்ற கேணி நீராவிப் பிள்ளையார் ஆலயத்திற்கே உரிய சிறப்பு. பிள்ளையார் வீதி உலா வரும்போது கேணியைச் சுற்றி வருவது வழக்கம் முன்பு இக் கேணியில் ஆடு மாடுகள் நீர் பருகி இளைப்பாறும். மக்களும் களைப்புத் தீரக் குளித்துச் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய ஆலய விசேட தினங்கள்

சித்திரைப் புதுவருடப் பிறப்பு, மணவாளக் கோலம், நவராத்திரி, விஜய தசமி, தீபாவளி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை விளக்கீடு பிள்ளையார் கதை, பெருங்கதை, திருவெம்பாவை, தைப்பொங்கல், எல்லா மாத சதுர்த்தி தினங்கள் என்பன ஆலயத்தில் நடைபெறும் விசேட தினங்களாகும். இவற்றுடன் அலங்காரத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெறும்.

இவ் ஆலயத்தில் உள்ள 'மழைக்கண்ணி அம்மன்' மிக்க அற்புதமானவர். மழை இல்லாத வருடங்களில் மழை வேண்டி மழைக்கண்ணி அம்மனை, ஐப்பசிக் கடைசி வெள்ளி அன்று அலங்காரம் செய்து விசேட வழிபாடாற்றி, பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். அவ்விழாவின் இறுதியில் மழை பெய்யும் அற்புதம் இக் கோயிலின் சிறப்பாகும்.

## பிற விபரங்கள்

இவ் ஆலயத்தில் வேதாரணியத்தில் இருந்து கொண்டுவரப் பட்ட மூலமூர்த்தி விநாயகர் விக்கிரகம் ஊனம் அடையவே, அக் காலத்தில் புகழ் பெற்றிருந்த திரு. இராமகிருஷ்ண ஆசாரியும், அவர் மருகர் குப்புச்சாமி ஆசாரியும், சற்றே பெரியதான புதிய விநாயகரை உருவாக்கித் தந்தனர்: அவரே தற்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விநாயகர்:

இவ் ஆலயத்திற்கு வடக்கே உள்ள காணியில் புதிதாக ஓர் திருநந்தவனம் அமைக்கப்பட்டு, ஆலயத் தேவைகளுக் கான வாழை, தென்னை மற்றும் பல வகைப் பூமரங்களும் வளர்க்கப் படுகின்றன.

## ஆலய புனருத்தாரணமும் இராஜகோபுரமும்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். ஆலயங்களில் மூன்று இலிங்கங்கள் உண்டு. கர்ப்பக்கிரகத்தில் உள்ளது சூக்குமலிங்கம். பலிபீடம் பத்திரலிங்கம் எனப்படும். வானளாவிய அழகுக் கோபுரம் தூலலிங்கம் எனப்படும். கோபுர தரிசனத்தால் பாவவிமோசனம் கிடைக்கும். ஆலயத்திற்கு அழகு, கம்பீரம், பெருமை என்பவற்றை அளிப்பது கோபுரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர்களது சிவப்பணி நிறைவேற இராஜகோபுர வேலைகளும், புனருத்தாரண வேலைகளும் 1981 ம் ஆண்டு ஆரம்பமாயின. ஐந்து மாடங்களை உடைய கோபுரம் பல அழகிய கலை அம்சங்களுடன் வளர்ந்து வர்ணப் பூச்சுடன் விநாயகர் மகிமையைப் புலப்படுத்துவதாக உள்ளது:

## ஆலய நிர்மாணம் செய்தோர் விபரங்கள்

*இராஜகோபுர நிர்மாணம்*

| | |
|---|---|
| கருங்கல் வேலை: | திரு. நா. சோமசுந்தரம் ஸ்தபதி - தாவடி |
| வெள்ளைக் கல் வேலை | திரு. மு. கணபதிப்பிள்ளை - அராலி |
| மேற்கோபுர வேலை: | திரு. வி. தம்பிராசா - அராலி |
| சிற்பங்கள்: | திரு. வி. நாகலிங்கஸ்தபதி தென் இந்தியா |
| | திரு. உ. சந்திரன் ஸ்தபதி தென் இந்தியா |
| வர்ணம்: | திரு. சுந்தரலிங்கம் குழுவினர் ஆனைப்பந்தி |

கோபுர வேலைகள் அனைத்தும் வைத்திய கலாநிதி யோகநாதன் மேற்பார்வையில் நடைபெற்றன.

| | |
|---|---|
| மகா மண்டபம்; நிருத்த மண்டபம்: | திரு. வ. சிதம்பரநாதன் தச்சன்தோப்பு<br>திரு. அ. தில்லையம்பலம் - அராலி<br>Ruhlins நிறுவனம் யாழ்ப்பாணம் |
| வசந்த மண்டபம்: | திரு. லோகநாதன் - அராலி |
| கலசங்கள்: | திரு. பாஸ்கரன் ஆசாரி - நீராவியடி |

மேற்படி மண்டபங்களுக்கான புனருத்தாரண வேலைகள் யாவும், இரகுநாத முதலியார், திருமதி. சாந்தாதேவி ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்றன.

திரு. உருத்திரலிங்கம் அவர்களும் திரு பாலச்சந்திரன் அவர்களும் அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளை வழங்கி உதவினார்கள்.

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம்.

1988 ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி புதன்கிழமை (7-9-88) பாலஸ்தாபனம் நடைபெற்றுப் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மேற்படி கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் சுக்கில வருடம் வைகாசி மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (4-6-89) காலை ஆரம்பமாகி, சுக்கில வருடம், உத்தராயணம், வசந்தருது, வைகாசி மாதம், பூர்வபக்ஷம், பஞ்சமி திதி, 26ம் திகதி வியாழக்கிழமை பூசநட்சத்திரம், அமிர்த சித்த யோகம், பவகரணம், சாத்வீகமும் சேர்ந்த நன்நாளில் (8-6-89) காலை 6.25 மணிக்கு மேல் 7-45 மணிக்குள் வரும் மிதுன லக்ன குரு ஹோரையில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாகப், பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பிரதான பிரதிஷ்டாகுரு, பிரதிஷ்டாபூஷணம், சிவாசார்ய சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் (நயினை) அவர்கள், தலைமையில் சுமார் 15 குருக்கள் (குருமார்கள்) நான்கு யாகங்கள் (மூலவர் - இராஜகோபுரம் - பைரவர் சண்டேஸ்வரர் அமைத்து பஞ்ச குண்டம் வைத்து ஏற்ற கிரியைகளைக் குறைவின்றிச் செய்து கும்பாபிஷேக வைபவத்தைச் சிறப்பாகச் சரியான நேரத்தில் நடாத்தி வைத்தார்கள்.

கும்பாபிஷேகத்தின் போதும் பின்னர் நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் போதும் ஆலயஉரிமையாளர்கள் திருவாளர்கள் சேனாதிராசா செல்வராசாவும், அருளம்பலம் சேனாதிராசவும் மிக்க உதவியாக இருந்து ஏற்ற காரியங்களை இனிது செய்து சிறப்பாக நிகழ உதவினார்கள்,

இக் கும்பாபிஷேகத்திற்கான அஷ்டபந்தன மருந்துகளும் விசேட ஓமத்திரவியங்களும், பிறவும் இந்தியாவில் இருந்து விசேடமாகக் கொண்டுவரப்பட்டன. ஆலய பரம்பரை அறங்காவலர் இரகுநாத முதலியார் சித்திரை மாதம் இந்திய யாத்திரையை மேற் கொண்டு, சுமார் ஒருமாத காலம் புண்ணிய ஸ்தலங்களையும், நதிகளையும் தரிசித்து, அங்கு ஒவ்வொரு இடத்தில் இருந்தும் புனித ஜலமும் திருமண்ணும் விரதம் இருந்து எடுத்து வந்தார். வட இந்தியாவில் ரிஷிகேசம், ஹரித்வார், யமுனை திரிவேணி சங்கமம் (யமுனை, கங்கை, சரஸ்வதி சங்கமிக்கும் இடம்) காசி (கங்கை) பின்னர் தென்இந்தியாவில் சிதம்பரம் திருநாரையூர் பொள்ளாப்பிள்ளையார், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், பூம்புகார் (காவேரி கடலுடன் கலக்கும் இடம்) திருவெண்காடு, திருவாரூர், நாச்சியார் கோயில், ஒப்பிலியப்பன் கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம், கும்பேஸ்வரர், காசி விசுவநாதர், மகாமகம்குளம், சுவாமிமலை, வெள்ளைப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கோயில் (திருவலஞ்சுழி) திருவானைக்கோயில் ஸ்ரீரங்கம், தாயுமானவர், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் (திருச்சி) குன்றக்குடி முருகன், பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், வைரவன் பட்டி காலபைரவர், அழகாபுரி இரட்டை பைரவர், திருப்பத்தூர் யோகபைரவர், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமநாத புரத்து உப்பூர் வெய்யிலுகந்த விநாயகர். இராமேஸ்வரம் (கோடி தீர்த்தம், சமுத்திர தீர்த்தம்) திருநெல்வேலி நெல்லையப்பர் (தாமிரபர்ணி), பவானி கூடலசங்கமம் (காவேரி பாவானி சங்கமம்) ஆகிய பல பிரபல்யம் வாய்ந்த புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து அருளாசி பெற்று வந்தார்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா மிலிங்கமாதி நளினபுட்கரணியாதி
சேதமுற்றிடின் முன் போலச் செய்கின்றோர்க் குறும்
பலன் தான்
ஓதுமுன் செய்தோர் தம் மிலாயிரங் குணித மோங்கும்

## மண்டலாபிஷேகம்

கும்பாபிஷேக வைபவத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்ட லாபிஷேக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று, பூர்த்தியன்று 1008 சங்குகள் வைத்து மகாசங்காபிஷேகம் இனிது நடைபெற்றது. மண்டலாபிஷேகத்தின் போது தினமும் காலை ஸ்நபனாபிஷேகமும் பூசையும் மாலை விசேட பூசையும் அதைத் தொடர்ந்து கதாப் பிரசங்கம், இன்னிசை நிகழ்ச்சிகள் பக்திப்பாடல்கள் சொற்பொழி வுகள்போன்ற நிகழ்ச்சிகள் தினமும் இடம்பெற்றன.

## புராணபடனம்

புராணபடனம் திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர் களால் நடாத்தப் பெற்ற மிகப் பெரிய சைவப் பணி. புராண படனம் யாழ்ப்பாணச் சைவர்களுக்கே சிறப்பானதொன்று. அதற் கேற்ப இந்த 48 நாட்களும் 'திருத்தொண்டர் புராணம்' புராண படனம் திரு. நா. கனகரத்தினம் அவர்களால் தினமும் காலை யிலும், மத்தியானங்களிலும் சிறப்பாக நிகழ்த்தப்பட்டது. அதன் பூர்த்திப் படிப்பு மண்டலாபிஷேகப் பூர்த்தி அன்று சிறப்பாக நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவி வீரகத்தி விநாயகர் அருள் ஆசிகள்

நீராவி வீரகத்தி விநாயகரைப் பூலோக முதலியார் பரம்பரையினர் தங்கள் சொந்தக் குழந்தையாகவே பாவித்து அவரைத் தம் குழந்தையிலும் சிறப்பாகப் பராமரித்து வந்தார்கள் அப்படியே பராமரித்தும் வருகின்றூர்கள். அவருக்குப் பூசைக் குறைவுகள் நேரும் போது உபவாசம் இருந்து அவருக்கு வீட்டிலே விசேஷ வழிபாடுகள் ஆற்றுவார்கள்.

இப்பரம்பரையில் வந்த திரு. நாகலிங்கம் அவர்கள் வீரகத்தி விநாயகர் பேரில் பல பல துதிப்பாடல் பாடி, பாமாலையால் அவரை அலங்கரித்திருக்கின்றூர்கள்.

"சீரார் நீராவிச் சிவகுமரன் செய்யதாள்
பாரோர் பரவிப் பணிந்திடுவார் — ஓராத
வீரகத்தியை யுதைக்கும் வீரன் அருட்பார்வை
ஊரகத்தில் என்றும் உள"

என்ற பாமாலையின்படி அவரின் பாத பங்கயங்களை இறுகப் பற்றி அவரே சரணம் என்று வழிபடு பவர்களுக்கு அவர் இடர் கடி கணபதியாக விளங்குகின்றூர். நீராவிப்பதி வாழ் மக்களுடைய விக்கினங்களைத் தீர்க்கும் விக்னேஸ்வரனாக விளங்கி, நீராவிப்பதியை கொலை, களவு, நோய், மற்றும் பல பல அழிவுகள், அல்லல்களில் இருந்து காப்பாற்றி வருகின்றூர். வேண்டுவார்க்கு வேண்டியது ஈயும் அவர் பிழை செய்தவர்களையும் பொறுத்து அவர்களை நல்வழிப் படுத்தும் நிரம்பிய கருணையாளர் - எல்லை மீறி நடப்பவர்களை அவர் தண்டிக்காமல் விடுவதும் இல்லை. தற்போதைய நெருக் கடியில் நீராவிப் பதி மக்களை அவர் காப்பாற்றி அருள் செய்த மைக்கு நீராவிப்பதி மக்கள் அவருக்கு நிரம்ப கடமைப்பட்டு, அவரை வழிபட்டு வருவது கண்கூடு. "தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று நீராவிப் பதி மக்கள் அவர் அருள் ஆசி வேண்டி அவருக்குப் பிரீதியானவை செய்து அவரை தினமும் வணங்கி வருகின்றூர்கள்.

"வேழ முகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுந்து வரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Town list of Temples
1892

# Neeravi Pillaiyar Kovil

No 34, Page *10* of the Register

Neeravi Pillaiyar Kovil Standing on the Land called Parithipulam.

*Built in 1805 by late Poologamudaliyar with Stones, Tiled, and Thatched.*

*Manager - Teyvanaipillai widow of*
*Sampanthanatha Mudaliyar.*

*Poosai Thrice A Day*

*Three Festivals - 1; in June 2: in August*
*3: in September:*

*Nature of Festivals - Street Procession at night: on Foot. East - Shroff Road: North - Neeravi Road: West - Neeravi Kulam; South - Street.*

*About 100 People Attend.*

*People of the Village only Attended:*

## யாழ்ப்பாண நகரம் - ஆலயங்களின் அட்டவணை
1 8 9 2

# நீராவிப் பிள்ளையார் கோயில்

இல: 34 பதிவேடு பக்கம் 10

நீராவிப் பிள்ளையார் கோயில் பருத்திப்புலம் என்ற காணியில் அமைந்துள்ளது.

பூலோக முதலியார் என்பவரால் 1805 ம் ஆண்டில் கற்களால் கட்டப்பட்டு, கூரை ஓடுகளால் வேயப் பெற்று கிடுகுகளால் அடைக்கப்பட்டிருந்தது.

மனேச்சர்; சம்பந்தநாத முதலியார் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை

மூன்று காலப் பூசை

மூன்று உற்சவங்கள் 1) ஆனி மாதம் 2) ஆவணி மாதம்
3) புரட்டாதி மாதம்

உற்சவ விபரங்கள்: வீதி உலா இரவில் நடைபெறும்.

கிழக்கு - சிறுப்பர் வீதி; வடக்கு - நீராவி வீதி;

மேற்கு - நீராவிக் குளம்; தெற்கு - வீதி:

சுமார் 100 பேர் பங்கு பற்றுவார்கள்:

இக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே பங்குபற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராவிப் பிள்ளையார்

### கலிவெண்பா

காப்பு

பொன் பூத்த நீராவிப் பூங்கோயில் வாழ்வுகந்த
மின் பூத்த வோர்கோட்டு வேழமே! - நின்சீர்த்தி
வெண் கலியாற் போற்ற விநாயகனே! நல்லருள்செ
யெண்கலி தீர்த் தென்னுள்ளே நின்று.

— சேனாதிராய முதலியார்

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★
UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY
249700
ARCHIVES
University of Jaffna
249700
Library

சைவப்பிரகாச அச்சகம் யாழ்ப்பாணம் 1989 J / No 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated
Mr K ... ATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சதள
இராஜ கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org